www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

ஜன – பிப் 2002



படிப்பகம்

www.padippakam.com

| பெண் உரிமை | உள்ளே . . . | பக்கம் |
|---|---|---|
| 2–1 | ☞ பெண் உரிமைக்காக | 3 |
| ஜன – பிப் 2002 | ☞ பொடோ ஒரு நச்சுப் பாம்பு | 4 |
| தனிச் சுற்றுக்கு மட்டும் | ☞ பாலியல் வன்முறை ஒரு அடக்குமுறைக் கருவி | 11 |
| | ☞ அழகி திரைப்பட விமர்சனம் | 20 |
| விலை ரூ. 5.00 | ☞ நுகர்வு கலாச்சாரமும் வாழ்க்கை முறையும் | 21 |
| ஆண்டு சந்தா ரூ. 30.00 | ☞ பெருகி வரும் பாலியல் வன்முறைகள் – ஒரு நேர்காணல் | 27 |
| | ☞ ஆனந்தியின் மனு | 31 |
| தொடர்புக்கு : அஜிதா 658 (17/34 இராணி அண்ணாநகர், கே.கே.நகர் சென்னை – 600 078 | ☞ தெலங்கானா இயக்கத்தில் பெண்கள் | 33 |



படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

# வளர்ந்து வரும் ஆபாச பண்பாட்டை ஒழித்திடுவோம்!

*அன்பார்ந்த நண்பர்களே!*

கடந்த மூன்று மாதங்களாக டாக்டர். பிரகாசின் காம இச்சைக்கு பல நூறு பெண்கள் இரையாக்கப்பட்ட விசயம் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது. சிறையதிகாரியின் – காவல்துறையினரின் பாலியல் வன்முறைக்கு ரீட்டா மேரி, என்ற இளம்பெண் இரையாக்கப்பட்டுள்ளதும் தெரிய வந்துள்ளது.

வெளிநாட்டவரின் காம இச்சையை பூர்த்தி செய்ய நான்கு வயது சிறுமி உட்பட பல நூறு பெண்கள் பாலியல் சுற்றுலா கொடூரத்திற்கு இரையாவதும் அம்பலமாகி உள்ளது.

ஏகாதிபத்திய கலாச்சார தாக்குதல், இந்தியாவில் வேரூன்றிய நாள் முதல் கொண்டு, மேலை நாட்டு ஆபாச பண்பாடு புற்றீசல் போல் வளர்ந்து வருவதால், பெண்கள் மீது இதுபோன்ற பாலியல் வன்முறைகளும், ஈவ் டீசிங் போன்ற தொல்லைகளும் அதிகரித்து வருகின்றது. இன்டர்நெட்டிலும் பெண்களின் உடல் கூறுபோட்டு விற்கும் அளவிற்கு, இந்திய பெண்களின் நிலை படுமோசமாகி விட்டது!

வளர்ந்துவரும், இந்த ஆபாச பண்பாட்டை எதிர்த்து, தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம் சென்னையில் ஆபாச புத்தக எரிப்பு, மதுரையில் ஆபாச படச்சுருள் எரிப்பு போன்ற போராட்டங்களை எடுத்தது. ஆபாச பண்பாட்டை ஒழித்திட இதுபோன்ற பல போராட்டங்களை எடுக்க வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

அதே சமயம், பெண்கள் மீதான தாக்குதலை எதிர்த்து, வளர்ந்துவரும் ஆபாச பண்பாட்டை எதிர்த்து பெண்கள் இயக்கங்களும், ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரளவேண்டிய அவசியமும் நம்முன் உள்ளது.

பெண்களின் போராட்ட சரித்திரத்தை குறித்திடும் மார்ச்–8, உழைக்கும் பெண்கள் தின நாளில், வளர்ந்துவரும் ஏகாதிபத்திய பண்பாட்ட தாக்குதலை எதிர்த்து கிளர்ந்தெழ சபதமேற்போமென, 'பெண் உரிமை' தமிழக மக்களை, பெண்களை அறைகூவி அழைக்கின்றது.

– *ஆசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

# பொடோ ஒரு நச்சுப் பாம்பு

இன்று இந்தியாவையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஒரு சட்டம்தான் பொடோ! பொடோ சட்டமானது பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்குவதற்கும், இராணுவப் படையினரைப் பாதுகாப்பதற்கும்தான் இச்சட்டம். வேறு யாரையும் பாதிக்காது என்று மத்தியில் ஆளும் பி.ஜே.பி. அரசு சொல்கிறது. உண்மையில் இச்சட்டம் சொல்வது என்னவெனில்!



முதலில் 23 அமைப்புகள் தற்போது இரண்டு அமைப்புகள் மொத்தம் 25 அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன. இவைகளில் நான்கு சீக்கிய அமைப்புகள், ஒரு கிறிஸ்து அமைப்பு, எட்டு இசுலாமிய அமைப்புகள், 10 வடகிழக்கு மாநிலங்களில் உள்ளவை. இப்போது இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி. (மா.லெ) (மக்கள் யுத்தம்) மற்றும் மாவோயின் கம்யூனிஸ்ட் கட்சி. தடை செய்யப்பட்டுள்ள அமைப்புகளையெல்லாம் பார்க்கும்போது இந்து ராஜ்ஜியத்தைப் படைக்க துடியாய் துடிக்கும் பி.ஜே.பி.யின் முத்திரை கிழிகிறது. தடை செய்யப்பட்டுள்ள அமைப்புகள் யார் என்று பார்த்தால் சிறுபான்மையினர், புரட்சிகர கட்சிகள், தேசிய இன போராளிகள் என போராடக் கூடிய அமைப்புகள்தான் உள்ளன. இவர்கள் ஆயுதம் தாங்கி போராடுகிறார்கள் என்று தடை செய்யப்பட்டுள்ளது. அப்படி பார்த்தால் ஆர்.எஸ்.எஸ். சிவசேனா, பஜ்ரங்தள் போன்ற இந்து மதவெறி அமைப்புகள்கூட இராணுவ பயிற்சி பகிரங்கமாகவே எடுக்கிறார்கள். தடையை மீறி எல்லாமே செய்வோம். இதுதான் எங்கள் கொள்கை என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்கிறது. மதத்தைப் பரப்பும் இசுலாமிய அமைப்புக்களை தடை செய்யும்போது இந்து மதவெறி பிடித்த ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா, பஜ்ரங்தள் போன்ற அமைப்புக்களை தடை செய்யாதது ஏன்? இராமர்கோயிலை கட்டியே தீர்வோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு சிறுபான்மை இனத்தவராகிய இசுலாமியர்களை ஒடுக்குகிறது. இந்தியா இந்துக்களுக்கே என்று



படிப்பகம்

www.padippakam.com

பகிரங்கமாக முழக்கம் வைக்கிறது. இவர்கள் இந்துமத வெறிபிடித்த, சமூக விரோதிகளாக, ரௌடிகளாகவே உள்ளனர். இவர்களுக்கெதிராக பாய வேண்டிய இச்சட்டம் சிறுபான்மையினர், பெண்கள், தலித்துகள் என்று அப்பாவி மக்கள் மீது பாயப்போகிறது. இந்து மதவெறி கும்பலை பாதுகாக்கவே இச்சட்டம்.

பொடோ சட்டமானது அரசு எந்த ஒரு போராடக்கூடிய அமைப்பையும் பயங்கரவாத அமைப்பு என்று முத்திரை குத்தி தடை செய்ய முடியும். வெடிகுண்டு, வெடிமருந்து, ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்கு வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும்தான் இச்சட்டம் பொருந்தும் என்று நினைப்பது நம் அறியாமையே ஆகும். இச்சட்டம் காவல்துறைக்கு பிடிக்காதவர்கள், அரசியல்வாதிகளுக்கு பிடிக்காத தனிநபர் அது நெசவு தொழிலாளியாக இருந்தால் அவரைக்கூட பாதிக்கும். காவல்துறையே தடைசெய்யப்பட்ட அமைப்புகள் நோட்டிஸை கையில் கொடுத்து பொடோ சட்டத்தின்கீழ் கைது செய்யலாம். இந்த வழக்குக்காகத் தான் கைது செய்யப்பட்டார் என்று சொல்லக்கூட வாய்ப்பு இல்லை. விசாரணைக்காக 90 நாள் காவலில் வைத்துக் கொள்ளலாம். கோர்ட் அனுமதியோடு 180 நாள் காவலில் வைத்துக் கொள்ளலாம். தடை செய்யப்பட்ட அமைப்பை ஒடுக்குவதற்கு மட்டுமே என்று அரசு சொல்கிறது. ஆனால் சட்டம் சொல்வது இந்த அமைப்பில் ஆதரவாளர்களாக இருந்தால்கூட அதாவது அந்த அமைப்பின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டால்கூட அவர் பயங்கரவாதிதான். அவரை பத்து ஆண்டுகள் சிறையில் தள்ளலாம். இவர்கள் கூறும் பயங்கரவாதி என்பவர் ஒரு கடையில் சட்டை வாங்கினாலோ, பழம் வாங்கினாலோ அந்த கடைக்காரரும் பயங்கரவாதியே. இப்படி பார்த்தால் யாரும் எந்த வியாபாரமும் செய்ய முடியாது. இச்சட்டத்தின்மூலம் சுயஉரிமை பறிக்கப்படுகிறது. ஒவ்வொரு விசயத்தையும் சட்டத்தோடு ஒப்பிட்டு பார்க்கும்போது அரசுடைய கைக்கருவியாகதான் இருக்க முடியும். எந்தவொரு மனிதனும் ஒரு அமைப்பின்கீழ் இருக்கவேண்டும். அது தனக்கு நல்லது என்றுதான் நினைப்பார்கள். ஏன் இச்சட்டத்தை அமுல்படுத்த துடியாய் துடிக்கும் பி.ஜே.பி. கூட ஒரு அமைப்புதான் என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் இச்சட்டம் அமைப்பாவதை முற்றிலும் தடுக்கிறது.

## தடுப்பு சட்டங்களின் கடந்த கால வரலாறு

1976–ம் ஆண்டு இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது கடத்தல்காரர்கள், போதை பொருள் கடத்துபவர்கள் என்று இவர்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும் என்று மிசா சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் எதார்த்தத்தில் எதிர்க்கட்சியையும், புரட்சிகர கட்சிகளையும் தாக்கிற்று. இன்றைக்கு இச்சட்டத்தை அமுலாக்குவதில் தீவிரமாய் இருக்கும் பிரதமர் வாஜ்பாய், அத்வானி, ஜார்ஜ் பெர்னாண்டஸ் இன்றைய சென்னை மேயரான ஸ்டாலின் போன்றவர்கள்கூட இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்கள். போதைபொருள் கடத்துபவர்கள், கடத்தல்காரர்கள் இவர்களை இச்சட்டம் தாக்கியதோ இல்லையோ, குறிப்பாக எதிர்க்கட்சிகளை புரட்சிகர அமைப்புக்களை, போராடுபவர்களை தாக்கியது.


படிப்பகம்

www.padippakam.com

அடுத்தப்படியாக 1985–ல் ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது தடா சட்டம் கொண்டு வரப்பட்டது. அச்சட்டம்கூட தீவிரவாதச் செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களை மட்டுமே தாக்கும் என்று கூறியது. இதுவும் எல்லோரையும் பாதித்தது. இந்த சட்டத்தை அன்று எதிர்க்கட்சியாக இருந்த பி.ஜே.பி. கடுமையாக எதிர்த்தது.

முன்னால் மந்திரி சுப்பு லெட்சுமி என்பவரை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாளர் என்றுகூறி தடாவின்கீழ் கைது செய்து பிறகு விடுதலையும் செய்தது. அன்று எதிர்க்கட்சியாக இருந்த பி.ஜே.பி. இச்சட்டத்தை கடுமையாக எதிர்த்தது. இன்றைக்கு பொடோவை நிறுவுவதற்கு ஆளாய் பறக்கிறது. பல முன்னாள் அமைச்சர்கள், மந்திரிகள், பொதுமக்கள், புரட்சிகர அமைப்புகள் என்று எல்லோரும் தடாவின் கீழ் கைது செய்யப்பட்டனர். இங்குகூட அரசு சொன்னது ஒன்று, நடந்தது ஒன்று.

## பொடோவை நிறுவுவதற்கான காரணம்

ஏகாதிபத்தியம் போடும் எலும்புத் துண்டுக்காக வாலை ஆட்டும் தரகு பெரு முதலாளிகளை, ஏகாதிபத்திய நாடுகளை காப்பாற்றவே இச்சட்டம். ஏகாதிபத்தியத்தின் கொள்கையான தனியார் மயமாக்கல், புதிய பொருளாதாரக் கொள்கை, உலகமயமாக்கல் நிலை நிறுத்தும் பொருட்டு இன்று நெசவு மற்றும் சிறு தொழில்கள் நசிந்து வருகிறது. அதை நம்பியிருக்கும் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வீதியில் வீசி எறியப்படுகின்றன. அதை எதிர்த்துப் போராடும் உழைக்கும் மக்களை ஒடுக்கவே இச்சட்டம். புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் அரசு ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, போனஸ் போன்றவை இரத்து செய்யப்பட்டன. இதை எதிர்த்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழிலாளிகள் போராட்டம் நடந்தது. தனியார் மயமாக்கலை எதிர்த்து மின்சாரவாரியம், தபால் துறை, வங்கி ஊழியர்கள் போராட்டம் நடந்தது. உலகமயமாக்கலை எதிர்த்து சிறு முதலாளிகள் போராட்டம் நடந்தது. இப்போது அரசு ஊழியர்கள் அதிகபட்சம் இருக்கிறபடியால் அவர்களாகவே விருப்ப ஓய்வு செய்தால் கருணை தொகை வழங்கப்படும். அல்லது கட்டாய பணி நீக்கம் செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இவர்கள் கொடுக்கும் கருணைத்தொகையை வைத்து வாழ்க்கை முழுவதையும் நிர்வாகம் பண்ண முடியுமா? ஒரு சில பெரிய பணக்கார நாட்டு முதலாளிகள் சுகமாக இருக்க சொந்த நாட்டில் இருக்கும் மக்களை ஒடுக்கவே இச்சட்டம்.

ஜனநாயக நாட்டில் இதை எதிர்த்து யாரும் கேள்வி கேட்க கூடாது என்பதற்காகவே பொடோ. இப்படி ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதன் ஒரு பகுதியே ஈவ்–டீசிங், இண்டர்நெட்டில் நீலப்படம் என்று மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என்று எல்லோரையும் போராட விடாமல் சிந்தனையை சிதைக்கவே உருவாக்கப்பட்டது. குறிப்பாக இது பெண்களை அதிகம் பாதிக்கிறது. பெண்கள் என்றாலே தீண்டத்தகாதவர்கள், இரண்டாம் தர குடிமக்களாகவே கருதும் இச்சமூகத்தில் இச்சட்டம் மேலும் பெண்களை ஒடுக்குகிறது. பாதுகாப்பு கேட்டு செல்லும் காவல்நிலையம் கற்பழிப்பு நிலையமாக மாறிவருகிறது. இச்சட்டம் அல்லாமல் இவர்கள் கற்பழித்தால்கூட இந்நீதிமன்றம் அவர்கள் பக்கம்தான் இருக்கும். இச்சட்டம் தப்பு பண்ணுவதற்கு மேலும் ஊக்குவிக்கிறது. இது



படிப்பகம்

www.padippakam.com

மட்டுமல்லாமல் சரவணபவன் ராஜகோபால், பிரகாஷ் போன்றவர்களுக்குக் கூட இரையாக வேண்டியிருக்கிறது. பெண்கள் அழகாக இருக்கவேண்டுமானால் அழகு நிலையத்திற்கு செல்லவும். அறிவை வளர்த்துக் கொள்வதற்கு இண்டர்நெட்டுக்கு செல்லவும் என்று மக்கள் மத்தியில் பெரிய மாயையை ஏற்படுத்துகிறது: அங்கு செல்வதன்மூலம் பெண்கள் தங்களை சுற்றியுள்ள பிரச்சனைகளை மறந்து பிரகாஷ் போன்றவர்களுக்கு இரையாகிவிடுகிறார்கள். இப்படி பெண்களை சிதைக்கும் காமப் பிசாசுகள் மேல் இச்சட்டம் பாயாது. அவர்களை பாதுகாத்து, போராடக்கூடிய அரசியல் கட்சிகள், பெண்கள், சிறுபான்மையினர், தலித்துகள் மீதே பாயும்.

எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் இராணுவம் துணை இராணுவப் படையினரை பாதுகாக்கவே இச்சட்டம் என்று உள்துறை அமைச்சர் அத்வானி கூறியுள்ளார். இக்கருத்துக்கு மனித உரிமை அமைப்புகளிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வந்தன. இது பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், ஏன் நீதிமன்றத்தைக்கூட விட்டு வைக்கவில்லை. பத்திரிகையாளர்கள் பத்திரிகைக்கு சேகரிக்கும் தகவலை முதலில் காவல்துறையிடம் தெரிவிக்க வேண்டும். அப்படி தெரிவிக்காவிடில் அவரும் பயங்கரவாதி என்று பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும். சொத்துரிமையை பறிக்கும் உரிமையை நீதிமன்றத்திடம் இருந்து பறித்து காவல்துறையிடம் இச்சட்டத்தின் மூலம் ஒப்படைத்துள்ளது. ஏற்கெனவே இவர்கள் பண்ணும் ரௌடித்தனம் போதவில்லை போலும். காவல்துறையின் முறைகேடுகளை கட்டுப்படுத்தும் நீதிமன்றத்தின் அதிகாரத்தை பறிப்பது பூமாலையை குரங்கு கையில் கொடுப்பதுபோல் உள்ளது. இப்படியே போனால் காவல்துறையே பத்திரிகையாளர்களாகவும், நீதிபதிகளாகவும் உலா வருவார்கள்.

இராணுவம், துணை இராணுவப் படையினர் பாதுகாப்பு இல்லாமலே எல்லையில் தேடுதல் வேட்டை என்ற பெயரில் அப்பாவி பெண்களை கற்பழிப்பதும் ஏதுமறியாத பச்சிளங் குழந்தைகளை கொல்வதும் அன்றாட நிகழ்வே. இராணுவம் மற்றும் துணை இராணுவப் படையினரின் மனித உரிமை மீறல்கள் 800 விழுக்காடு அதிகரித்து உள்ளதை சுட்டிக்காட்டுகின்றன. மனித உரிமை ஆணையத்துக்கு வந்துள்ள புகார்களின் எண்ணிக்கை 452. கடந்த ஆண்டு எண்ணிக்கை 61–தான். அதிகமான புகார்கள் சிறுபான்மையினர் வாழும் ஜம்மு–காஷ்மீர், டெல்லியில்தான் அதிகம்.

இதுபோக தமிழக கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. உயிரை பணயம் வைத்து மீன்பிடித்து வந்தால் இராணுவப் படையினர் வந்து எடுத்து சென்றுவிடுகின்றனர்.

காவல்துறை என்றாலே மக்கள் மத்தியில் குறிப்பாக பெண்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. அப்பாவி பெண்ணான ரீட்டாமேரியை பாதுகாக்க வேண்டிய காவல்துறையை சேர்ந்த முருகேசன் விபச்சார விடுதியில் ரூ.1000 விற்றுவிட்டார். இது மட்டுமல்லாமல் விபச்சார வழக்கில் சிறையில் அடைத்து அங்கும் ரீட்டாவை கற்பழித்து அந்த இளம் மொட்டுவை சிதைத்து விட்டனர். சாட்சியாக இருந்த ஏகாம்பரம் என்ற வாலிபரை திராவகம் ஊற்றி கொல்ல சதி செய்தனர். இப்படி எந்த அமைப்பையும் சேராத ரீட்டாமேரியை காவல் துறை தண்டித்தது.



படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகர பெண்கள் அமைப்பை சேர்ந்த ஆனந்தி என்ற பெண்ணை என்பவர் பெண்களுக்காகவே போராடினர் என்ற ஒரே காரணத்திற்காக அவர்மேல் ஆயுதங்களை வைத்திருந்ததாக வழக்கு போட்டு சிறையில் அடைத்தனர். அவரது பணி அங்கும் தொடர்ந்தது. சிறையில் நடந்த கொடுமைகளை தட்டிக் கேட்டதால் செருப்பால் அடித்து, நிர்வாணப்படுத்தி மயக்க ஊசிபோட்டு இப்படி பல வழிகளில் அவரை சித்திரவதைப்படுத்தினர். இப்படி சிறைக்குள்ளும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நடக்கிறது. இப்படி அமைப்பில் உள்ள பெண்களையும் சரி, அமைப்பில்லாத எண்ணற்ற பெண்களையும் சரி காவல்துறை காமக்கண் கொண்டுதான் பார்க்கிறது. பாதுகாப்பதுபோல் தெரியவில்லை. இப்படிப்பட்ட இந்த கேவலமான இராணுவப்படைக்கும், காவல்துறைக்கும் பாதுகாப்பாம்? இப்படிப்பட்ட அயோக்கியர்களிடம் தான் இச்சட்டத்தின்மூலம் அதிகாரத்தை கொடுத்திருக்கிறது. மத்தியில் ஆளும் பி.ஜே.பி. அரசு. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையாம்? இப்படி மக்களை, போராடுபவர்களை சித்ரவதைப்படுத்தும் இராணுவப்படையினருக்கும், காவல்துறையினருக்கும் ரௌடித்தனம் பண்ண இச்சட்டத்தின்மூலம் லைசென்ஸ் கொடுக்கிறது.

## இச்சட்டம் தேவைதானா?

நாட்டில் பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் ஒடுக்க ஏற்கெனவே எவ்வளவோ போதுமான சட்டங்கள் இருக்கும்போது எதற்கு இந்த பொடோ? கடந்தகால தடுப்பு காவல் சட்டங்கள் எல்லாம் சொன்னது என்ன? செய்தது என்ன என்று கண்கூடாக பார்த்தோம். இதில் மிகப்பெரிய வேதனையான விசயம் என்னவென்றால் தீவிரவாதமோ, பயங்கரவாதமோ இல்லாத நாட்டில் தடாவின் கீழ் 10,000 பேர் கைது செய்யப்பட்டனர். அதில் எதிர்கட்சிகள், புரட்சிகர அமைப்புகள், பொதுமக்கள் எல்லோரும் அடங்குவர். இப்படி உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்கும் போராடுபவர்களை புரட்சிகர அமைப்புக்களை அடக்குவதற்கும்தான் இச்சட்டம்.

மொத்தத்தில் ஏகாதிபத்தியத்தில் தலையான அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு சேவை செய்வதே இதன் நோக்கம். அதன்படி எல்லோரையும் அடக்கி ஒடுக்குவதற்காகவே இந்த பொடோ! தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு இந்திய சட்டப்பிரிவுகள் எவ்வளவோ இருக்கும்போது இந்த பொடோ தேவையில்லை. ஏன் இதே காவல்துறை சங்கம் வேண்டும் என்று போராடியது மறந்துவிட்டது போலும். இப்படி ஒவ்வொரு சட்டமும் போடும்போது குறிப்பிட்ட நபர்களையோ அல்லது அமைப்பையோ குறிவைத்து போடப்படுகிறது. ஆனால் எதார்த்தத்தில் அது யாரை பாதிக்கும் என்பது நாம் அறிந்ததே. அதனால் புரட்சிகர அமைப்புகள், எதிர்கட்சிகள், பெண்கள், அறிவு சீவிகள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், சிறுபான்மையினர், தலித்துகள், தேசிய இன போராளிகள் என்று ஜனநாயக சக்திகள் எல்லோரும் ஓரணியில் திரண்டு போராட வேண்டும். பொடோவை எதிர்க்க மக்கள் சக்தி ஒன்றே போதும். மக்கள் சக்தியை எதுவும் மிஞ்சினதாக வரலாறு கிடையாது. இந்நிலை மாற சமூகமாற்ற பாதையில் அணி வகுப்போம்.

*— ஆசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

# பாவம்! மனு அவர்கள்?

“எல்லா நான் சொன்னபடியே நடக்குதா?”

“ஆமா பிரபு! பெண்களுக்கு சுதந்திரம் இல்லாமல் சிறு வயதில் தந்தை, பிறகு கணவன், வயதான காலத்தில் மகனை சார்ந்திருக்கிறதா செய்திட்டோம்”

“சரி! இப்ப அவர்களுக்கு ஏன் வேலை கொடுத்தீர்கள்? இது அவர்களுக்கு விடுதலை கொடுப்பதல்லவா?”

“இல்லை பிரபு! வீட்டில் சமையல், பாத்திரங்கள் தேய்ப்பது, துணி துவைப்பது... எல்லா வேலையும் அவர்களே செய்யுறாங்க... வேலை அதிகமாக இருக்கும் போது விடுதலைக்கான சிந்தனைக்கு வாய்ப்பே இல்லை”

“அவங்க எல்லா துறைகளிலும் நுழையறாங்களே?”

“அதென்ன விசயம்?”

“அய்யோ! உங்களுக்கு இன்னும் புரியலையா? அது அவர்களை இன்னும் அடக்குவதற்குதான், அவர்களின் உழைப்பில் நாங்கள் லாபம் சம்பாதிக்கத்தான்”

“என்ன லாபமோ, என்னமோ! இதனால அவர்களுக்கு தன்னம்பிக்கை வராதா?”

“வரவே, வராது பிரபு! அவங்க செய்ற வேலைக்கு திறமை தேவையே இல்லை. 5 வயது குழந்தைங்க கூட செய்வாங்க பிரபு!”

“அப்ப இந்த பெண்கள் இயக்கங்கள் என்ன? அவங்க இதை அவமானமா பாக்கலையா?”

“சித்தம் பிரபு! நம்ம காவல்துறை அவர்களை அடக்குறாங்க... அரசாங்கம் அவர்களின் வாய மூட சீர்த்திருத்த நிகழ்ச்சிகள நடத்துது”

“சரி இப்ப எல்லாமே நல்லாயிருக்கு, அப்படி தானே?”

“ஆமா பிரபு! அனைத்தும் தங்களின் ஆணைப்படி அமுல்படுத்தி பெண்களை....”

“கள்.. கள்... அப்பப்... என்ன இந்த புகை?”

“ஒரு நிமிசம் பிரபு! பார்த்திட்டு வரேன்”

“அய்யய்யோ! குடி முழுகிப்போச்சு பிரபு!”

“என்னாச்சு... என்னாச்சு?”

“பொம்பளைங்க மனு ஸ்மிருதியை கொளுத்திட்டு இப்படியே வராங்க...” ●



படிப்பகம்

www.padippakam.com

# போதும் இந்த அவலநிலை

உதிரங்கள் கொதிக்க
கூலியை காணிக்கையாக்கி
ஊனையும் உருக்கி
சீதனமாய் நூறுவகை தந்து!
மணக் கோலத்தில்,
தன் புதல்வியை காணும்
கண்கள்;
அய்யனுக்கு வப்பாட்டியாக்கி
அடிமையின் சாசனத்தை ஏற்று
தோற்று வாயில் ஆரம்பமாகிறது
வீட்டு சுமை முதல்
பொருளாதார சுமை வரை
சுமப்பதில் கழுதைகளுக்கு
இளைத்தவர்கள் அல்ல
நாங்கள்!
உலாவரும் ஆணாதிக்க
கழிசடைகளையும் சமாளித்து
படுக்கைகளை கண்ணீர்
துளிகளால்
அலங்கரித்த இந்த அவலநிலை
போதும்...

சமத்துவத்தை உணராத
பேடிகளே; முன்னோர்கள்
வகுத்ததை சீர் படுத்தும்
சீர் கெட்டவர்களே!
தள்ளாத வயதில்
மனைவி இறந்தால்
மறுமணத்திற்கு இளம் பெண்ணாம்!
சாதி சடங்குகளில்
பிணங்களாக நீந்தும்
இச்சமூகமே
கணவன் இழந்தால்
அமங்களமாம்!
ஒதுக்கிவிடுகின்றனர்.
கசடுகளுடன் உற்று நோக்கும்
கண்களை பொருத்தது போதும்
(போதும்) இந்த அவலநிலை...

உரிமைகள் பறிக்கப்பட்டு
உருக்குலைந்த நெஞ்சோடு
சிறை கூண்டில் வாழும்
கண்ணீர் கதைகளை;
மரணங்கள் தான் வென்றது!
உதிரங்களை உறிஞ்சும்
வேட்டை நாய்களை ஒழிப்போம்
போராட்ட குணங்களை
வளர்த்தெடுப்போம்!

– அர்ச்சனா

## தனியாயிருக்க விடுங்களேன்

அரண்மனையில் என்னைச் சுற்றிலும்
காவல்
ஆரண்யம் வந்தால் அண்ணன் தம்பி
காவல்
அட அசோக வனத்தில் அரக்கியர்
காவல்
எங்கேயும் காவல்.
மனிதரா அரக்கரா யாராயிருப்பினும்
காவலில்லாத ஓர் தனிமை
தாருங்கள்

என் ஏக்கமெல்லாம் ஓர்
இராமனே அல்லா சுதந்திரம்
காவலில்லா ஓர் சுதந்திரம்
கால்போன போக்கில் களைத்துத்
திரிவது
சித்தார்த்தனுக்குக் கிட்டிய தனிமை
சீதைக்கு கிட்டலாகாதா?
சீதையாயிருந்து சிந்தித்து உணர
சற்றே தனிமை தாருங்கள்!

– சஃப்ரா பேகம்




படிப்பகம்

www.padippakam.com

# பாலியல் வன்முறை - ஒரு அடக்குமுறைக் கருவி

அடிப்படையில் மனித நேயமும் அனைத்து வகையான சமத்துவ நோக்கம் இருந்தால்தான் சமுதாயம் வளமாக நலமாக இருக்க முடியும். இத்துடன் உற்பத்தி, உழைப்பு பங்கீடு இவையும் சேர்கின்றன. ஆனால் உழைப்பு உற்பத்தி, சொத்து இவற்றின் அடிப்படையில் சமூகம் வேறுபட்டு ஏற்றத்தாழ்வுற்று இருப்பது ஒருபுறம், பிறப்பாலும், சாதியத்தாலும் ஏற்றத்தாழ்வுற்று இருப்பதும் ஒருபுறம், கடவுள் நம்பிக்கையில் காணும் வேற்றுமையால் மதப்பாகுபாட்டில் இருப்பதும் ஒருபுறம், அத்துடன் பால்பாகுபாட்டினால் ஏற்றத்தாழ்வுக் கருத்துருவைக் கொண்டிருத்தல் ஒருபுறம், இங்ஙனம் பல்வேறுவகை அடிப்படையில் பாகுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் மலிகின்றபோது மனித நேயமும் ஆங்காங்கே மறையும்படி நேர்கிறது. 'சமத்துவ நோக்கு' அற்ற சமூகத்தில் இவை அனைத்திலும் மிக அதிகமான பாதிப்புகள் இரண்டாம் நிலையில் உள்ள பகுதிக்கே நேர்கிறது. அதிலும் பெண் மேற்கூறப்பட்ட அனைத்து வகைப் பாகுபாட்டின் தீங்குகளாலும் அதிகமாக பாதிப்பிற்கு உள்ளாகிறாள்.



பொதுவாகப் பெண் பிறப்பு என்பதே தாழ்வானதும், துன்பத்திற்குரியதுமாகக் கருதப்படுகிறது. பிறப்பால் சாதிப்பாகுபாடுகளில் ஏற்றத்தாழ்வுப் போல பெண் பிறவியும் இரண்டாம் தரமாகக் கருதப்படுகிறது. பிறப்பு, உணவு, ஊட்டம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அனைத்து வகையிலும் பாரபட்சம் கருதப்படுகிறது. அவள் பாதுகாக்கப்பட வேண்டிய பொருளாகவும், கெட்டுப்போகின்ற பண்டமாகவும், சார்பு பொருளாகவும், நுகர்வுப் பொருளாகவும், இரசனைக்குரிய பிறவியாகவும், எளிதில் மயங்கும் இனமாகவும், மயக்கும் போதைப் பொருளாகவும் கருதப்படுதலே மரபாக வந்துள்ளது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, பெட்பு, வியப்பு இவையே அவளின் குணங்களாகவும் எதிர்பார்க்கப்பட்டன. நினைப்பு, வளர்ப்பு, எதிர்பார்ப்பு அனைத்தும் இங்ஙனம் இருந்ததால் இச்சமூகத்துப் பெண்ணும் அவள் ஒரு மனித இனம் என்பதைவிட, அவள் ஆடவர்களின் கணிப்பிற்குரிய பெண்ணினம் என்பதையே நிறுவும் பிறவியானாள்.

எந்த வயதிலும் எந்த நிலையிலும் ஒரு ஆடவனைச் சார்ந்து வாழ வேண்டியவள் என்ற கருத்தியலும் மற்றவர்களால் கண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் உரியவள் என்ற கண்ணோட்டமும் ஆழப்பதிந்த சமூகம்! திணிக்கப்படும் கற்பும், கட்டாயக் கற்பு மீறலும் சமூக நீதியாகக்கூட காலங்காலமாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்துள்ளது! இதைப்பற்றி வெட்கப்படக்கூட விவேகம் இல்லாத சமுதாயமாக இருந்தது! ஏனெனில் பெண்ணின் பாதிப்பு என்பது ஒரு சமூகப் பிரச்சனை என்றோ, அவளுடைய சுதந்திரம் என்பது ஒரு சமூகத் தேவை என்றோ கருதப்படவில்லை. ஒரு பாவப்பிறவி, பரிதாபப் பிறவி, சோகப்பிறவி, தியாகப் பிறவி, துரோகப் பிறவி, அடிமைப்பிறவி போன்ற கருத்துக்களே காலங்காலமாக இறுகி இருந்தன. அதனால் ஆதிக்கத்தனமும், அடிமைத்தனமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது. பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அவை உயிர்வதை, உயிர்க்கொலை உணர்வு வதை எவையாயினும் அவை இயல்பானவை என்றும், அவளுக்குப் பெருமை சேர்ப்பன என்றும் கொள்ளப்பட்டன. பாலிய விவாகம், சதி, கைம்மை இவையெல்லாம் அதனாலேயே காலம்காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கால மாற்றத்தால், சூழ்நிலை மாற்றத்தால், அறிவியல் உயர்வால், சிந்தனை மாற்றங்களால் பல்வகை மாற்றங்கள் சமுதாயத்தில் வந்துள்ளன. எனினும் அடிப்படையில் ஊறியிருக்கும் ஆதிக்க மனப்பாங்குகள் அவ்வளவு எளிதில் மாறுவதில்லை. ஆண் என்ற சுயகர்வம், உடல் வலிமை, உடைமைத் திமிர், பதவி, அதிகார ஆயுத வலிமை, தாக்குதல் தனக்கில்லை என்ற அலட்சியம் இவையெல்லாம் சேர்ந்து ஒரு ஆடவன் ஒரு பெண்ணுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுவதற்கு உரம் சேர்க்கின்றன. தன்னைச் சார்ந்த, உறவான பெண் தனக்கு முன் பின் அறிமுகமில்லாத பெண் என்று எந்தப் பெண்ணின்மீதும் ஒரு ஆடவன் வன்முறையைக் கட்டவிழ்க்கின்றான். அவளது உணர்வு, உடல், சுயமரியாதை, விருப்பம், வாழ்வுரிமை என்ற எவற்றிற்கு எந்த அளவு தீங்கு வந்தாலும், இழப்பு வந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் வன்முறைகளைக் கையாளுகிறான். வார்த்தைகள், சீண்டல்கள், தண்டனைகள், வேலைப் பளுக்கள், வன்புணர்ச்சி, விற்றல், கொலை என்று எத்தனையோ வகையில் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள்! பெண்ணுக்கு எதிரான இவ்வன்முறைகளால் பெண்ணுக்கே அவமானம் என்று எண்ணுவதும், அதனால் அவற்றை பொறுத்துக் கொள்வதும், மறைத்துக் கொள்வதும் அவளுக்கு மதிப்பு என்றும் போதிக்கப்பட்டும் வந்துள்ளது.

பெண் இரண்டாந்தரக் குடிமகள்போல் கருதப்படுதல் என்பது சாதாரண விசயம் அல்ல. அது அவளை பலவீனப் பிறவி என்பதை நிரூபிப்பதாக அமைந்துவிடும். கல்வி, சொத்து, வாய்ப்பு எனும் அனைத்திலும் அடுத்த நிலை என்பதோடு மட்டும் நிற்காது. அவள்மீது ஏவப்படும் அனைத்து வகைத் தாக்குதல்களுக்கும் அங்கீகாரம் வந்துவிடும்.

ஆணாதிக்கத்தனம் என்பது ஒரு தனிப்பெரும் பலம் அல்ல. அதுவும் ஆதிக்கத்தனங்களின் ஒரு கூறுதான். அதனால்தான் பெண்களும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் பங்கு கொள்கின்றவர்கள் ஆகின்றனர். நீதித்துறை, காவல்துறை நிர்வாகங்கள் எல்லாம் அதனால்தான் துணைபோகின்றன. பாலியல் வன்முறை ஒரு அறைக்குள் மட்டுமின்றி அம்பலததில் நடக்கின்ற கொடுமையாகவும் ஆகின்றது.

அடக்குமுறை, ஒடுக்குமுறை இவை உடல், சமூகம், பணம், பெரும்பான்மை, அரசியல் நிர்வாகம் இவற்றின் பலத்தினால் நடத்திவிடலாம், பாதிப்புப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கலாம் என்ற திமிர் மனப்பான்மை அடிப்படையில் ஊறி இருப்பதால்தான் அவற்றின் ஒரு கூறாக பாலியல் வன்முறையும் இடம்பெறுகிறது. இது மிக எளிதாகவும் நடக்கிறது என்பதுதான் வேதனையான விசயம். இவற்றை முறியடிப்பது அவ்வளவு எளிதல்ல. எனினும் மகளிர் இயக்கங்களும் போராட்ட உணர்வுகளும் வெளிச்சத்தைக் காட்டத் தவறவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

**பெண்களுக்கெதிரான வன்முறைகளில் பாலியல் பலாத்காரம் மிகக் கொடுமையானது. குடும்பத்துக்குள்ளே, வேலை செய்யும் இடத்தில், தனியாகச் செல்லுமிடத்தில், குடும்பத்துடன் செல்லுகையில், அதிகாரிகளால், காவல்துறையால், சமயத் தொடர்பானவர்களால், கலவரங்களால், பிரிவினைகளால் என்று இங்ஙனம் பல்வேறு சூழல்களில் பாலியல் வன்முறை நிகழ்கிறது.**

வீட்டிற்குள்ளேயே என் கையில் கணவன் மனைவிக்கிடையேயான உறவு இயல்பாக இல்லாமல் அவளைக் கொடுமைப்படுத்தும் வன்புணர்வாக அவளது வாழ்க்கையை நரகமாக்கும் விதமாகவும் அமைவதுண்டு. இந்நிலையில் மனைவி என்ற ஒரு காரணத்திற்காக உதறித்தள்ள இயலாது. பல்வேறு மனக்காயம், உடற்காயங்களைப் பொறுத்துக்கொண்டு வாழ்கிறாள்.

மாமனாரே மருமகளை வன்புணர்வுக்கு உள்ளாக்க விரும்புவது, கணவனின் உடன்பிறந்தோர் துய்க்க விரும்புவது உண்டு. 'பார்வதி ஷா' வழக்கு இங்ஙனம் வந்ததே. பார்வதி ஷாவின் கொழுந்தன் அவளைப் பாலியல் வன்முறைப்படுத்திக் கொன்ற வழக்கு சமீபத்தில்தான் நிகழ்ந்தது.

திருமணமாகாத பெண்ணை, தமக்கையின் கணவன் நிர்ப்பந்திப்பது குடும்பங்களில் நிகழ்கிறது. அந்தப் பெண் வெளியே சொன்னால் வீட்டில் பிரச்சனையாகும் என்றும், தமக்கை நோவாள் என்பதற்காகவும் பொறுத்துக்கொண்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளச் சிரப்படுவாள். விடுதியிலிருந்து வீட்டிற்குச் செல்லத் தயங்கும் பெண்களுக்கான காரணங்களில் இதுவும் ஒன்று. ஏன், வீட்டிற்குள்ளேயே உடன்பிறந்த தமையன், ஏன் பெற்ற தந்தையே சின்னஞ்சிறு குழந்தைகளை வன்முறைக்கு உள்ளாக்கும் கொடுமையும் நடக்கிறது. பெற்ற தாயிடமே சொல்ல வழியின்றித் தவிக்கும் குழந்தைகள் உள்ளன.

விழுப்புரம் – சங்கராபுரம் கிராமத்தில் அப்துல்கரீம் என்றவன் (வயது 41) தனது 5 பெண்களையும் மனைவியையும் கழுத்தை நெறித்து குழியில் புதைத்தான். மூத்த மகளை நிர்வாணமாக்கிப் புதைத்துள்ளான். காமவெறியால், காமவெறித் தணிப்பிற்குத் தன் மகளையே நுகர நினைத்து முடியாமற் போனதால் இங்ஙனம் செய்ததாகக் காவல்துறைப் புலனாய்வு கூறுகிறது (ஜீ.வி. 9–9–2001).

தனது 12 வயது மகளைப் பாலியல் வன்முறைக்கு இலக்காக்கியுள்ளான் ஒரு தந்தை. அவமானம் தாங்காமல் பெண் அடுத்த நாள் தீயிட்டு இறந்திருக்கிறாள். அவளது மரண வாக்குமூலம்தான் கிடைத்தது (5–01–2002 தினகரன்) தந்தை கைதாகியுள்ளார்.

இத்தகைய வழக்குகளில் எல்லாம் பொதுவாக பெண்கள் மரணம் அடைவதே முடிவாக உள்ளது. இவர்களின் வீட்டில் பெண் குழந்தைகளே மிகுதியாக இருக்கின்ற வீடாகவும் இருப்பதைக் காண முடிகிறது. தான் ஒருவனே ஆண் என்ற ஒரு சுயகர்வமும் தனக்கு எதிராக மறுப்பாக தனது வீட்டிற்குள் எதுவும் நிகழாது என்ற ஒரு அவதானிப்பும் இந்தத் துணிச்சலைத் தருகின்றது.

குடும்பங்களுக்குள்ளே வன்முறைகள் பெரும்பாலும் வெளியே வருவதில்லை. காரணம் மொத்தத்தில் குடும்பத்திற்குத்தான் அவமானம் என்ற நினைப்பே காரணம். அத்துடன் வீட்டுப் பெண்களின் மானம் போகும் என்ற நினைப்பு.

பெண்கள் வேலைக்குச் செல்லுமிடத்தில் பாலியல் வன்முறைகள் நடக்கிறது. வீட்டுவேலை செய்யும் வேலைக்காரிகள் தமது பொருளாதார நிலைமையினாலும் பல சீண்டல்களைப் பொறுத்து


படிப்பகம்

www.padippakam.com

கொள்வதுண்டு. பொதுவாக வீட்டு ஆணுடன் வேலைக்காரியைப் பொருத்திப் பேசும் நகைச்சுவைத் துணுக்குகள் மிகுதி. தனது கணவரைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ செய்யாது வேலைக்காரர்கள்மீது பழிபோடுவது வீட்டுப் பெண்களுக்கும் இயல்பாகி விடுகிறது. வீட்டுமானமா, வேலைக்காரியின் அவமானமா என்று வரும்போது பெண்களே வேலைக்காரி என்பதால் வீட்டுமானம் என்பதையே காப்பாற்றப்பார்க்கின்றனர். வேலைக்காரியின் குரலும் பலமும் எடுபடாமல் போகும். இதேபோல் பெரிய அதிகாரிகள் தமது காரியதரிசிகளிடம் எங்ஙனம் நடந்து கொள்கிறார்கள் எனும்போது, அங்கும் பாலியல் வன்முறைகள் நடக்கின்றன. நடுத்தர வர்க்கத்துப் பெண்கள் கூச்சமும் அச்சமும் நிரம்பியவர்களாகவே உள்ளனர். அதிகார பலத்தின்முன் தனது குரல் எடுபடாது என்ற அச்சமும், சேலை முள்ளு மேலே விழுந்தாலும் முள்ளு சேலை மேலே விழுந்தாலும் சேலைக்குதான் ஆபத்து என்று சொன்ன முதுமொழியாலும் மனத்தில் அடைத்து வைத்து உள்காயங்களுடன் உலா வருகின்றனர்.

பொதுவாக பண்ணைகள், மிட்டா மிராசுகள் தமது விருப்பப்படி ஆளுபவர்களாகக் கூலித் தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். தமது தொழிலாளர்களை ஒடுக்குவது என்பதன் ஒரு அடையாளமாக அவர்கள் மகளிரை வன்முறைக்கு உட்படுத்துவதைச் செய்வர்.

(மிட்டா மிராசுகள் எங்கள்
ஆடவரை எரிப்பார்கள்
அவர் பெண்டிரை அணைப்பார்கள் – நீலமலை).

பெண்களின் உழைப்பும் ஊதியமும் மட்டுமே முழுமையாகக் குடும்பத்திற்குச் செலவீனமாகும் சூழலில் பெண்கள் பல இன்னல்கள் இடர்ப்பாடுகள் கேவலங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொள்கின்றனர். உழைக்கின்றவர்களை, அதிலும் உழைக்கின்ற பெண்களைப் புழுக்களாக எண்ணும் மனப்பாங்குகள் இன்னும் மாறவில்லை.

"தண்ணி கருத்திருச்சி தவளை சத்தம் கேட்டுருச்சு புள்ளை அழுதிருக்கு
புண்ணியரே போகவிடு"

என்ற பாடல், நாட்டுப்புறப் பெண்களின் நிலைமையை உணர்த்தும், வேண்டுமென்றே காலந்தாழ்த்திக் கூலி கொடுத்தல், தனியாகக் காக்க வைத்தல், பாலினக் கொடுமை செய்தல் இவையெல்லாம் மிட்டா மிராசுகளின் இஷ்டமான விளையாட்டுக்கள். இதில் அவப்பெயரும், பாதிப்புக்களும் வெளியே சொன்னாலும் சொல்லவில்லையென்றாலும் பெண்களுக்கே நேர்வதால் பெண்கள் புழுங்கிச் சாகிறார்கள். குழந்தைகளின், அதிலும் பெண் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுமோ என்ற அச்சத்திலேயே பல பெண்கள் தங்களுக்கு நேரும் பல அவமானங்களைத் தாங்கித் திரிகின்றனர். இதில் மேட்டுக்குடி பெண்களும் அடங்குவர்.

வன அதிகாரிகள், காவல்துறையினர் இவர்களும் பெண்களை வன்முறைக்குள்ளாக்குகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்காக கள்ளிப் பொறுக்க வரும் பெண்களை ஓநாய்களாக கடித்துக் குதறி எறிந்துவிடும் அதிகாரிகள் உண்டு. வீரப்பனைத் தேடிச் சென்ற வனத்துறையினரால், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் நாசமாக்கப்பட்டனர் என்ற செய்திகள் வருகின்றன. தங்கள் அதிகாரத்தைக் காட்டவும், தங்கள்



படிப்பகம்

www.padippakam.com

இச்சையைத் தீர்த்துக் கொள்ளவும் எந்தச் செயலிலும் இறங்குகின்றனர். தாக்குதலுக்குள்ளாகின்ற பெண்கள் பற்றிய கவலையும்படுவதில்லை கவுரமும் கருதப்படுவதில்லை. இளம் பெண்கள் பயணம் செய்கையில் வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

சமீபத்தில் ரீட்டா வழக்கு தீவிரம் அடைந்துள்ளது. ஆத்தூரிலிருந்து சென்னைக்குப் பேருந்தில் ஏற வந்த பெண் ஏமாற்றப்பட்டு, ஒரு ஊரில் விற்கப்பட்டு பின் காவல்துறையால் காவல் நிலையத்தில் பாலியல் வன்முறைக்குள்ளாகி, மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறாா். அவரை 'விலைமகள்' என்று வழக்குபோட்டனர். முதலில் இப்போது தீவிர விசாரணையின் காரணமாக ரீட்டாவுக்கு நேர்ந்த கொடுமைகள் வெளியே வர அவளை இந்த நிலைக்கு ஆளாக்கிய காமுகன் முருகேசன், சிறைக் காவல்துறையினர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு பத்தொன்பது வயதுப் பெண் எவ்வளவு அலறியும் போராடியும் தப்பிக்க இயலாமல், பலாத்காரம் செய்யப்பட்டு 7500/-- ரூபாய்க்கு ஒரு சிவப்பு விளக்குப் பகுதிக்கு விற்கப்பட்டு, பின்னர் சிறைத்துறையாலும் நசுக்கப்பட்டிருக்கிறாள். ஒரு இளம் பெண்ணினுடைய பலம், தைரியம், நம்பிக்கை அத்தனைக்கும் மீறிய கொடுமைகள் நடக்கும்போது அவள் மனதாலும் பாதிக்கப்படுகிறாள். ஒரு பெண் அதிகாரி (ஐ.ஜி திலகவதி) விசாரித்ததின் மூலமாக அவளுக்குக் குற்றம் புரிந்தோர்க்குத் தண்டனையும் அவளுக்கு நியாயமும் வழங்கப்படுகிறது.

பத்திரிகைகள் இவ்வழக்கில் ரீட்டாவின் படத்தையே போட்டு பிரபலப்படுத்தின. இதற்குமுன் கடலூர் பத்மினி வழக்கு குற்றவாளிகளைத் தண்டிக்கும் நிலைக்கு வந்தது மட்டுமின்றி, பத்மினி வேலைக்குச் சேர்ந்து, தலை நிமிர்ந்து வாழவும் காண்கிறோம். மகிளர் அமைப்புகளின் முயற்சியே அவளுக்கு முழு உதவியாக இருந்தது. கணவன் முன்னால் காக்கி உடைக்காரர்களாலேயே வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு கணவனை இழந்து பின்னரும் ஒரு வாழ்க்கையை வீரமுடன் சந்திக்கின்ற பெண்கள் பெருமைக்கு உரியவர்கள். காந்தியடிகளின் வார்த்தை 'காப்பாற்றிக் கொள் அல்லது செத்து மடி' என்பது பெண்களைக் கோழைகளாக ஆக்கிவிடும்.

பொதுவாக வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்கள், மரணத்தையோ, மனநோயையோ தழுவுகின்றனர். காரணம் பாதிக்கப்படுவது பெண்கள் என்றாலும், பெண்களே மேலும் குற்றவாளிகள் ஆக்கப்படுகின்றனர். கற்புத் திறத்தால் கனலையும் தாண்டலாம், மீண்டு வரலாம் என்று கதைகளில் போதிக்கலாம். காவல்துறையே பலாத்காரம் செய்யும்போது என்ன நேரும்? பாலியல் அத்துமீறல் என்பது சாதாரணமாகக் கொள்ளப்படுகிறது. ஒரு ஆடவனின் சூழ்நிலை, தேவை என்று காரணம் காட்டப்படுகிறது. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணையே குற்றம் சாட்டி, அவள் சம்மதம் இருந்தது, தூண்டுதல் இருந்தது என்று வழக்குகூட முடிக்கப்படுகிறது. 'மதுரா' வழக்கு உச்சநீதி மன்றத்தில் அங்ஙனம் முடிக்கப்பட்டது.

"பன்னிரெண்டே வயதான நயனன்தாராவைக்
கற்பழித்துக் கொன்ற காவல் நிலையங்களில்
பறக்கும் கொடியில் சூழல்வது என்னவோ
தருமத்தைக் காக்கும் அசோக சக்கரமே"

என்று கேலி செய்யும் நிலை வருகிறது. ஊர் காக்க உடுப்புப்போட்டவர்கள் சீரழிப்பவர்களானால் என்ன சொல்வது? 14 வயதுப் பெண் மணிப்பூர் இம்பால் தியேட்டரில்


படிப்பகம்

www.padippakam.com

பலாத்காரத்திற்குள்ளாக்கப்பட்டாள். அதுதான் நீதிமன்ற வழக்காகியது. சமூக விழிப்புணர்வு, பாதிக்கப்பட்டவர்கள் வெளியே சொல்லலாம் என்ற தைரியம் இவை வந்தபின்தான் வழக்குகளாக பாலியல் பலாத்காரம் வெடிக்கிறது. ஒரு 50 ஆண்டுகட்கு முன் இவை புதைந்தே போயின. வெளியே பேசத் தக்க விசயமாகவே கொள்ளப்படவில்லை.

ஒரு ஆடவனால் மட்டுமின்றி பலராலும் பலாத்காரத்துக்குள்ளாகும் வன்முறையும் உண்டு. மாயா தியாகி என்ற பெண் தன் கணவனுடன் செல்லும்போது வழி மறிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறாள். கணவன் கொல்லப்பட்டு அவள் நிர்வாணமாக கடை வீதியில் கொண்டு வரப்பட்டாள். சிறுநீர் குடிக்கச் செய்திருக்கிறார்கள். இத்தனை கொடுமைகளையும் நடத்தியவர்கள் காவலர்கள். இந்தப் பிரச்சனை பாராளுமன்றத்தில் ஒலித்தது. அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்வரை கொண்டு செல்லப்பட்டது (மனுஷி 1980 ஆகஸ்ட்) மகளிர் பத்திரிகைகள் வெளிச்சமிட்டன. 1978, 79 இல் தொடர்ச்சியாக ரபிசாபீ, ஷகீலா ஆகியோர்க்கு இழைக்கப்பட்ட வன்புணர்ச்சிக் கொடுமையால் ஹைதராபாத் இஸ்லாமியர்கள் இடையே கொந்தளிப்பு வந்தது. ஆனால் ரபீஜாபீ கணவர் காவலர் துன்புறுத்தலால் இறந்துவிட அவள் விலைமகள் என்று முத்திரை குத்தப்பட்டாள்.

கலவரங்கள், போர்கள் இவை போன்றவை நடைபெறும்போதும், சாதிச் சண்டைகள் இவற்றின்போதும் பெண்களை அவமானப்படுத்துவதே மிகப்பெரிய வெற்றிவாகை என்று கருதப்படுகிறது. இந்தியா, பாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்த பாலியல் வன்முறைகள் கொடுமையானவை. இந்திராகாந்தி இறப்பின்போதும் இக்கொடுமைகள் நடந்தன. ஈழப்போரில், ஈழத்தமிழர் இல்லங்களில் எல்லாம் இத்தகைய கொடுமை நடந்தது. தமிழர்களுக்கு சிங்களக் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்று கொக்கரித்தார்கள். பகைமையான பெண்ணை கர்ப்பவதி ஆக்குவது பழிவாங்கலின் ஒரு முறையாகக் கணிக்கப்பட்டது. அவமானப்படுத்துதல், தோற்றவர்கள் என்று முத்திரை குத்துதலுக்கு இம்முறை கையாளப்பட்டது. பிரிவினையின்போது இங்ஙனம் குழந்தையைச் சுமந்தவர்கள் உண்டு. ஒவ்வொரு இஸ்லாமியப் பெண்ணுக்கும் இந்துக் குழந்தை பிறக்க வேண்டும் வக்கரித்தவர்கள் 80,90 களில் இருந்தார்கள்(ஆர்.எஸ்.எஸ்.) பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் ஒரு வரலாற்றுக் கறுப்பு நிகழ்ச்சி. அப்போதைய கலவரங்கள், அதன் தொடர் நிகழ்வுகளால், அதிலும் கோயம்புத்தூரில் (1997) நடந்த வன்முறை கொடுமையானது, வீட்டிற்குள்ளிருந்த கோஷாப் பெண்களை வன்முறைக்குள்ளாக்கி, வீதிக்கிழுத்தும் கேவலப்படுத்தி, எந்த வகை மருத்துவ உதவிகளும் கிடைக்கப்பெறாத நிலையையும் உண்டாக்கி, வெறித்தாக்குதலைச் செய்த மத அடிப்படைவாத வெறியர்களின் கொடுமை வரலாற்றில் கூறப்படுகிறது. ஊரில் உள்ள பணக்காரர்கள், காவல்துறை, மருத்துவமனை அத்தனையும் அந்த நேரத்தில் வெறியர்களுக்குத் துணை போயிருக்கின்றன. காரணம் வெறியர்கள்மீது கொண்ட அச்சம், அரசாங்கத்தின் போக்கு இவைதான். ஆளும் அரசும் அதிகாரிகளும் வெறியர்களாகும்போது நிலைமைகள் கைமீறுகின்றன. கோவை, மும்பை இவற்றில் இஸ்லாமியர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை, அதிலும் அவ்வினப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை வரலாற்றில் கரும்புள்ளி ஆகியது. பட் நகரில் பல பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ரஹமதி என்ற வயதான பெண் சுட்டுக் கொல்லப்பட்டாள். சூரத்தில் அன்வரிபேகமும், போபாலில் ஷகிலாவும் (7.12.1992) போல் எத்தனையோ பெண்கள் இறப்புகளுக்கும் கேவலங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். பட்டியலல்ல நமக்கு இதன் அடிப்படை வெறித்தனம் முறியடிப்பதே இலக்கு.

சமயப் போர்வையிலும் பாலியல் வன்முறைகள் நடைபெறுகின்றன. சாமியார் என்ற சலுகையும் வேடமும் கள்ளத்தனத்திற்குத் திரையாகவும் இருந்துவிடுகிறது. பிரேமானந்தா வழக்கில் உஷா



படிப்பகம்

www.padippakam.com

முதலான 14 பெண்கள் ஆசிரமத்திலிருந்து தப்பி வந்தனர். பின்னர் நாலைந்து பெண்கள் மீண்டும் அஞ்சிக் கொண்டு அவரிடமே சென்று விட்டனர். அதற்குப் பத்திரிகைகள் 4 அழகிகள் மீண்டும் அவரிடம் சென்றனர் என்று எழுதின.

இவ்வளவு கொடுமைகள் கொச்சைத்தனங்கள் நடந்தும் பெண்ணை சிறுபான்மை மக்களின் பாதிப்புகளில், சீக்கிய, கிறித்தவப் பெண்களும் அடங்குவர். கிறித்தவ கன்னியாஸ்திரிகள் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட கொடுமை நிகழ்ந்துள்ளது. இரண்டாண்டுகளுக்கு முன் மத்திய பிரதேசத்தில் கூட்டு வன்புணர்ச்சிக்கும் கன்னியாஸ்திரிகள் உள்ளாக்கப்பட்டள்ளனர் என்று இத்தகைய கொடுமைகளைச் செய்தவர்கள் அனைவரும் இந்துமத அடிப்படைவாத வெறியர்கள். பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. கூட்டங்கள்.

இந்திராகாந்தி கொல்லப்பட்ட நாட்களிலே சீக்கியர்களுக்கெதிராக நடந்த வன்முறைகளில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் சீக்கியப் பெண்களும், இளைஞர்களுமே.

ஆனால் இவையெல்லாவற்றையும் விட மிகுதியாக எப்போதும் வன்முறைக்குள்ளாகின்றவர்கள் தலித் இனப் பெண்களே. இவர்களும் தாக்கப்படுவதற்கு ஒரு கால, சூழல் எதுவும் தேவை இருப்பதில்லை. ஏனெனில் நமது சமுதாயத்தின் கண்ணோட்டம் அப்படி. ஒரு சிறுபொறி எழுந்தாலும், வெறித்தாக்குதல் கட்டவிழ்க்கப்படும். அதிலும் தலித்தியப் பெண்களைத் தாக்குவதில் பெண் காவலர்களும் சளைப்பதில்லை. நெல்லை மாஞ்சோலை நிகழ்ச்சி, கொடைக்கானல் குண்டுப்பட்டி வன்முறை, மேலவளவு இவையனைத்துக்கும் முன்னோடியாகப் பதிவு செய்யப்பட்ட கீழ்வெண்மணி இவையெல்லாம் ஏட்டிலும் பாட்டிலும் வந்த சில கொடுமைகள். மற்றபடி தீட்டு என்பதே கருதப்படாமல் தலித் பெண்கள் வன்புணர்ச்சியில் மட்டுமே தீண்டப்படுகிறார்கள். இது இந்த நாட்டின் களங்கம். எனினும் இவை எதுவும் டர்பன் மாநாட்டில் பேசப்படாமல் தடுக்கப்பட்டது. அதனினும் அவமானமும் உரிமை மறுப்பும் ஆகும். இப்படி வர்ணிக்க வேண்டுமா?

ஆனால் வெளியே வந்துவிட்ட பெண்கள் உண்மைகளை அம்பலப்படுத்தி அரங்குகளில் எல்லாம் பேசினர். மகளிர் அமைப்புகள் பாதுகாப்பளித்தன. எத்தனையோ துன்பங்களுக்கு இடையேயும் இத்தகைய போலித்தன்மைகள் துகிலுரிக்கப்படுகின்றன. பாதிரியார்களாலும், முல்லாக்களாலும் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டவர்கள் உண்டு. மதத்திற்கு இழுக்கு என்றோ, பெண்ணுக்குத்தான் அவமானம் என்றோ இவை பெரும்பாலும் மறைக்கப்படுகின்றன.

பாலியல் வன்முறைக்கு உட்பட்ட பலபெண்கள் மனநிலை பாதிக்கப்பட்டும், மரணத்தைத் தழுவியும் அல்லது விலைமகளாக விற்கப்பட்டவர்களாகவும் ஆகின்றனர். இந்த நிலைக்கு உள்ளாகின்றவர்களில் பலர் வாழ்க்கை வழக்காக மாறுவதே இல்லை. எங்கோ அமிழ்ந்து போகின்றது. ஒரு சிலவே வெளியே கொண்டு வரப்பட்டு அது ஒரு சமூகப் பிரச்சனையாக, பெண்ணின் பிரச்சனையாக கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது.

பொதுவாகவே பெண்கள் மீது குற்றம் சுமத்திவிடுதல் எல்லோர்க்கும் எளிதான செயலாக இருக்கிறது. பெண்களே வன்முறையை விரும்புகின்றனர் என்றும் குற்றங்கள் திசை திருப்பப்படுகின்றன. ஒரு பெண் தன் கண்ணியத்தை நிலைநிறுத்தப் பெரும்பாடுபடவேண்டியுள்ளது. பாதுகாப்பு என்ற பெயரில் அவள் பயப்பட வேண்டும் என்ற போதனையில் வளர்க்கப்படுகிறாள். ஆனால் அவளது பயமே அவளைக் கொடுமைக்குத் தள்ளுகிறது. அவளது பயத்தை தனக்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துகிறார்கள் ஆண்கள். மண்டாண்டத்திற்கும், முள்மேல் சேலைக்கும் உவமிக்கப்பட்டு


படிப்பகம்

www.padippakam.com

வளர்க்கப்படுகையில் பாலியல் வன்முறை பற்றிய அறிவு வருமுன் அச்சமே முன் நிற்கின்றது.

பெண்ணின் தூய்மை, மாசுபடாமை, கறைபடியாமை என்று ஒரு புறம் அவளது கற்பு போற்றப்பட்டுக் கொண்டு, ஆனால் அது ஒரு ஆடவனின் சொத்து என்று கணிக்கப்படுவதும் உண்டு. அதைக் கவரும் உரிமை ஒரு ஆணுக்கு உரியதாகப் பார்க்கப்படுகிறது. அதில் அவருடைய விருப்பம், ஒப்பம் என்பது பின்னுக்குத் தள்ளப்படுகிறது. பலாத்காரங்கள் நிகழ்த்துபவர்கள் ஆண்களாயினும் கறைப்பட்டதாகக் காட்டப்படுவது பெண்தான். ஆண் கறைபடுவதே இல்லை.

பாலியல் வன்முறை என்பது எளியது அன்று. இயல்பானதும் அன்று, ஒரு பெண்ணின் உடல், உள்ளம், சுயமரியாதை இவற்றைப்பற்றிய அக்கறை இல்லாத சமுதாயத்தில்தான் இது அரங்கேறுகிறது. இது உடல் ரீதித்தாக்குதல் மட்டுமன்று. ஒரு சமூகத்தின் சான்றாண்மை இங்கு கேள்விக்குறியாகிறது. ஒரு சரிபாதி இனத்தின் சுயமதிப்பும், அதனால் ஒரு சமூகத்தின் மதிப்பும் நசுக்கப்படுகிறது. இவை வெறும் வழக்குகளாக அல்ல, வாழ்க்கையாகப் பார்க்கப்பட வேண்டியவை.

வன்முறைக்கு உள்ளாகும் பெண் தான் ஒரு விலைமகள் அல்ல என்று நிரூபிக்க வேண்டியுள்ளது. ஒரு ஆணுக்கு வன்புணர்வு கொள்ளாதிருப்பது ஒரு கட்டுப்பாடு என்றாகிறது. (காந்தியடிகளே இதனை நிரூபிக்கப் பாடுபட்டார்) ஒரு பெண்ணுக்கு பாலியல் வன்முறை ஒரு சமூகக் கொடுமையாகி விடுகிறது. வன்முறைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய சமூகக் கண்ணோட்டம், காவலர்களின் நடவடிக்கை, விசாரணைமுறை, சட்ட ஓட்டைகள், காவல்துறை, நீதித்துறை இவற்றின் பார்வை, பத்திரிகை வாசகங்கள் இதுபோல் எத்தனையோ தாக்குதல்கள் அவளுக்குத் தொடர்கின்றன. திரைப்படத்திலும் தாள்களிலும் உணர்ச்சிகரமான காட்சியாக்கப்படுகிறாள் பெண். இத்தனைக்கும் மீறி அவள் போராட வேண்டியுள்ளதால் சூழ்நிலையை ஒத்துக் கொள்ளவோ, ஒதுங்கிக் கொள்ளவோ பலரும் முடிவெடுக்கின்றனர். அல்லது சாவு, சிவப்பு விளக்கு இவற்றைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஏழை, எளிய அடித்தள மக்களின் உணர்வுகளும், மதிப்புகளும் சுலபமாக விலைபேசக் கூடியவையாகவும் அபகரிக்கத்தக்கனவாகவும் அமைந்துவிடுகின்றன. நடுத்தர வர்க்கப் பெண்களும் குடும்ப வாழ்வு, சமுதாயச் சூழல் காரணமாகப் பல கொடுமைகளையும் மென்று முழுங்குக் கொள்ளவே பழகுகின்றனர். மேட்டுக்குடிப் பெண்களும், மேட்டுக் குடித்தனப் போர்வையில் பல கொடுமைகளை புழுங்கிய மனத்துடன் அங்கீகரித்துக் கொண்டுள்ளனர்.

டாக்டர் பிரகாஷ் என்றொரு கயவன் தொழிற்சாலை போல, பெண்களை வைத்து பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிப் படமெடுத்தல், வெளிநாடுகளில் போன்றவற்றை உற்பத்தி செய்து வணிகம் செய்து கொண்டிருக்கிறான். எத்தனையோ நாசங்களுக்குப் பிறகே மோசடிகள் வெளிவருகின்றன.

பணக்கஷ்டம், மனக்கஷ்டம், மாட்டிக்கொள்ளுதல், அரசியல் பலாத்காரம் போன்ற எத்தனையோ காரணங்களால் பெண்கள் சிவப்பு விளக்குப் பகுதிகளில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றன. எந்தப் பெண்ணும் மகிழ்வோடு இந்தத் தொழிலை ஏற்பதில்லை. சிவப்பு விளக்குத் தன்மைகளுக்கு அபலைப் பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டு பழக்கப்படுத்தப்படுகின்றார்கள். மாட்டிக் கொண்டபின் வரமுடியாமல், வந்தும் பயனில்லை என்ற முடிவோடு வாழ்கின்றனர்.

எங்கே போய் யாரும் ஒளிந்துகொள்ளமுடியும், வாழ்க்கை வெளிப்படையானதாக, தனக்குரியதாக அமைக்க இயலாதவர்களாக பெண்கள் உள்ளனர். இதில் இவர்களின் குழந்தைகளின் கதி கேள்விக்குறியாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

குந்திக்கும் மேரிக்கும்
குழந்தை கொடுத்தவர்
குப்பம்மாளுக்கும் கொடுத்திருப்பார் என்று
நம்பித்தொலையுங்களேன்

என்று எரிச்சல்படுகிறார் ஒரு கவிஞர். ஏழைப் பெண்கள், தாழ்த்தப்பட்ட இனப் பெண்கள் இதில் இன்னும் கேவலமாக்கப்படுகின்றனர்.

ஒரு பெண்ணின் பாதிப்பு என்பது சமூகத்தின் பாதிப்பு, ஆண்களின் பாதிப்பு, அனைவரின் பாதிப்பு. இதை உணர மறுக்கும் சமுதாயம், வெறும் சட்டத்தால் திருந்தாது. விழிப்புணர்வும் மனோபலமும், சமத்துவ உணர்வும், சட்டத்துணையும், பாலியல் கல்வியும் ஆண் பெண் இருபாலரிடையேயும் கொடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களைக் கேவலப்படுத்தாத மனப்பக்குவம் எப்போது வரும்?

வரதட்சணை கொடுமைகளும் பாலியல் பலாத்காரமும் தலைவிரித்தாடும் நிலையில் சமுதாயத்தில் பெண்களின் மதிப்பீடுகள் தாழ்ந்து, ஆணாதிக்கம் மலிந்திருக்கிறது என்பதே பொருள். ஆனால் இன்றைய சூழலில் பெண் விடுதலை கருத்துக்கள் பரவி வருகின்றன. 'பெண்ணியம்' என்பது மனித உரிமை மீறலுக்கு எதிரான ஒரு கோட்பாடு. பெண்களை அதிலிருந்து காப்பதற்காக, ஆண்–பெண் சமத்துவத்தை வலியுறுத்துவதற்காக உணர்ந்து பரவிவரும் ஓர் விழிப்புணர்வு. அதன் வாயிலாக அனைத்து வகைச் சமத்துவத்திற்கும் அறைகூவல் விடும் ஒரு கோட்பாடாகப் பரிணமிப்பது இது! அதனால் பெண்ணினுடைய சுயமரியாதைக்கு பங்கம் வராமல் காக்கப்படும் இடம்தான் நல்ல சமூகமாக உருவெடுக்க முடியும்.

*டாக்டர். எம்.ஆர். சஃப்ரா பேகம்,*
*தமிழ்துறை பேராசிரியர்,*
*மாநில துணை செயலாளர்,*
*தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் சங்கம்,*
*தமிழ்நாடு.*

*திணிக்கப்பட்ட*
*வார்த்தைகளை*
*துப்பிக்கொண்டு*
*வார்க்கப்பட்ட*
*வாழ்க்கைக்குள்*
*நகர்ந்துகொண்டு*
*நான்.*
*மனக்கவர்ச்சி*
*எரித்து*
*பீனிக்ஸ் பறவையாய்*
*உயிர்த்தெழுந்து...*
*சற்றே*
*கனவு மற*
*மனமே*
*சுதந்திரமாய்*
*ஒரு முறையேனும்*
*சுவாசித்துக் கொள்.*

– மாயா



படிப்பகம்

www.padippakam.com

# அழகி

## - திரைப்பட விமர்சனம்

"அழகி" – படத்தின் பெயருக்கேற்றாற்போல் அழகிய கதையம்சம்தான். முதல் பாதியை அற்புதமான, கள்ளம் கபடமற்ற கிராமத்துப் பின்னணியிலும், மறுபாதியை அவசரமான நகரத்துப் பின்னணியிலும் படமாக்கிய விதம் இன்னும் அழகு. சிறுவயது முதல் பெரியவர்கள் வரை கதாபாத்திரங்களின் கவனமான தேர்வு நிச்சயம் கைதட்டலுக்குரியது. அந்த கிராமத்துப் பள்ளிக்கூடமும், குனிந்து, நிமிர்ந்து "வாய்ப்பாடு" சொல்லும் காட்சியும், படம் பார்க்கும் அனைவரையும் அவர்களின் சிறுவயது பள்ளிப்பிராயத்துக்கு அழைத்துச் சென்றிருக்கும் என்பது உண்மை. அந்தக் கிராமத்துக் குழந்தைகளின் கள்ளமற்ற, சின்ன சின்ன குறும்புத்தனங்கள், நாமும் சிறு வயதுப் பிராயத்திற்கே சென்றுவிட மாட்டோமா என்று அனைவரையுமே ஏங்க வைத்து விடுகிறது. எப்படிப்பட்டவர்களும் அரசியலில் தலைவராகலாம் என்ற நமது இன்றைய அரசியலின் அவலத்தை சுட்டிக்காட்டும் விவேக்கின் நகைச்சுவை அந்த நேரத்தில் சிரிக்க வைத்தாலும், சிந்தித்துப் பார்த்தால் வேதனைத் தருவதாக உள்ளது.

பள்ளிப் பருவத்தில் ஒவ்வொருவருக்கும், ஏதோ ஒரு பெண்ணின்மீதோ, ஒரு ஆணின்மீதோ ஏற்படுகின்ற இனம்புரியாத ஒரு ஈர்ப்புதான் படத்தின் கரு. ஒருவனுடைய மகிழ்ச்சியும், நிம்மதியும் அவனுடைய பழைய காதலியை மீண்டும் பார்க்காத வரைதான் என்பது இப்படத்தில் சொல்லப்படுகிறது. இதில் நடித்த அனைவரும் அந்தந்த கதாபாத்திரங்களாகவே மாறியிருக்கின்றனர்.

அழகிய அத்திப்பழத்திற்குள் அருவறுக்கக்கூடிய புழுக்கள் இருப்பதைப்போல "குருவி கொடைஞ்ச கொய்யப்பழம்" பாடலின் வரிகளும், நடன அசைவுகளும், ஆடையின் சிக்கனமும் முகம் சுளிக்க வைக்கின்றன. தயாரிப்பாளரின் வியாபார நோக்கத்திற்காக என்ற பெயரில் ஒரு பெண்ணை இப்படி ஆடவிடுவது பெண்களை வியாபாரப் பொருளாக கருதும் மனப்பான்மையைத்தான் காட்டுகின்றது.

இதில் மிகவும் பாராட்டப்பட வேண்டியது, தேவயாணி நடித்த கதாபாத்திரம்தான். மனிதாபிமானத்தோடு அந்த சிறுவனை தன்னுடைய வீட்டிற்கே மறுபடியும் அழைத்து வரும்போது, படம் பார்க்கும் அனைவரின் மனதிலும் உயர்ந்து நிற்கிறது அந்த கதாபாத்திரம். அனைவருக்குமே பள்ளிப்பருவ நினைவுகள் உண்டுதான் என்றாலும் இந்தப் படத்தைப்போல ஒரு பெண்ணால் தனது உணர்வுகளை இந்த ஆணாதிக்க சமூகத்தில் வெளிப்படுத்த முடியாது என்பதே யதார்த்தமாக இருக்க முடியும்.

இசை ஞானியின் இசை இதம். ஒளிப்பதிவாளர் இயக்குனராகியிருப்பதாலோ என்னவோ "அழகி" ஒளி ஓவியமாக கண்களில் தெரிகிறாள். மொத்தத்தில் அழகி அனைவரின் ஒட்டுமொத்த உணர்வுகளை வெளிப்படுத்தும் அழகிய கண்ணாடி.

– **பூமகள்**



படிப்பகம்

www.padippakam.com

# நுகர்வுக் கலாச்சாரமும், வாழ்க்கை முறையும்

நுகர்வுக் கலாச்சாரம் என்றால் என்ன? என்கிற வினாவிலிருந்து இக்கட்டுரையைத் துவங்கலாம். பொருட்களை உற்பத்தி செய்பவர்கள் உற்பத்தியாளர்கள் எனவும், அப்பொருட்களை விலைகொடுத்து வாங்கிப் பயன்படுத்துவோரைப் பயன்பாட்டாளர்கள் அல்லது நுகர்வோர் என்றும் கூறலாம். இந்தப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்துவோர்களான நுகர்வோர்களுக்கென்று காலப்போக்கில் ஒரு வழக்கம் உருவாகிறது. அதுவே அவர்களுடைய முன்னாளில் காணப்படும் வழக்கத்தை அல்லது பண்பாட்டை மாற்றக் கூடிய ஒரு கூறாகவும் விளங்குவதை நாம் காண முடியும். இப்படி மாற்றம் கண்ட இப்பண்பாட்டுக் கூறு வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிடுகிறது.

நுகர்வின் மூலமாய் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய இப்பண்பாட்டுக்கூறு வாழ்க்கை முறையை மூன்று விதங்களில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகக் காணப்படுகிறது.

1. பண்பாடு
2. அரசியல்
3. பொருளாதாரம்.

**பண்பாடு**

பண்பாடு என்கிற நோக்கில் நுகர்வுக் கலாச்சாரம் வாழ்க்கை முறையை எவ்வாறு மாற்றுகிறது என்று நோக்கும் போது, உணவு, உடை, ஆன்மீகம், பழக்கவழக்கம், இலக்கியம், ஊடகம் இவை அனைத்திலும் இந்த நுகர்வுக் கலாச்சாரம் நுழைந்து ஒரு பண்பாட்டுச் சீரழிவை உண்டாக்கிக் கொண்டிருப்பதை அறிய முடியும். இன்னும் எளிதாக ஒரு சான்றோடு சொல்ல முற்படுவோமானால், நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில பொருட்களை எடுத்துக் கொள்வோம். அவற்றை நாம் கடையிலிருந்து குறிப்பிட்ட வகையை தேர்ந்தெடுப்பதற்கான மனநிலை எப்படி நமக்குள் உருவாக்கப்பட்டது என்பதைப் பார்க்கலாம்.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் சோப்பு, பவுடர், கிரீம், துணி துவைக்கும் சோப்பு, உணவு வகைகள் என்று பார்க்கும் போது ஒரு பெரிய மாறுதலுக்கு ஆட்பட்டிருக்கிறோம் என்பது உண்மை. கடையிலிருந்து மேற்கண்டவற்றை நாம் தேர்வு செய்யும்போது, ஒவ்வொன்றின் விளம்பர வாசகங்களும், அவற்றின் காட்சி



படிப்பகம்

www.padippakam.com

ரூபங்களும் நம்மையறியாமல் நம்முடைய மனக்கண் முன் ஓடுவதை நிறுத்த இயலுவதில்லை. எந்தப் பொருளின் விளம்பரம் காட்சி ரூபமாகவும், வாசக ரூபமாகவும் நம்மைக் கவர்ந்திழுக்கிறதோ அந்தப் பொருட்களைத்தான் நாம் தினமும் வாங்கிப் பயன்படுத்துகின்றோம் என்பது உண்மை. அவற்றின் விலையைப் பற்றியோ, பொருளுக்கேற்ற விலை தானா என்பதைக் குறித்தோ, அளவு மற்றும் தரம் குறித்தும் கூட நாம் எவ்வித அக்கறையும் செலுத்தாமல், அதை வாங்கிப் பயன்படுத்துகிறோம். அந்தப்பொருள்களில் இருக்கக்கூடிய வேதிக் கூட்டுப் பொருள் குறித்தும் அது நம்முடைய தேகத்திற்கு ஏற்படுத்தக்கூடிய பின்விளைவுகள் குறித்தும் நாம் கவலைப்படுவது கிடையாது.

பன்னாட்டுக் கொள்கை இந்தியாவிற்குள் நுழைந்த பின் இத்தகைய மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருப்பதையும் நாம் பார்க்கலாம். சில வெளிநாடுகளில் ஒவ்வாமை எனப்படும் அலர்ஜி ஏற்படுத்தக்கூடிய துணிதுவைக்கும் சோப்புதூள் நம்முடைய நாட்டிற்கு ஒரு பிரபல கம்பெனியினால் இறக்குமதி செய்யப்பட்டு இன்று நடுத்தர மக்கள் பெரும்பாலோரால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. தாராளமயமாக்கலின் மூலமாய் நிறைய பேருக்கு வேலைவாய்ப்பும், தரமான பொருட்களும், வாழ்க்கை வசதிகளும் மேம்படும் என்று நமக்கு மூளைச் சலவை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும் இத்தகைய பின்விளைவுகள் பற்றி நம்மைச் சிந்திக்கவே விடாமல் ஊடகங்களும் தம் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றன.

ஊடகங்களில் காணப்படும் விளம்பர வாசகங்கள் மக்களை ஏமாற்றுபவனவாகவே இருக்கின்றன. "புத்திசாலியான பெண்ணும், மனைவியும், தாயும் எந்தப் பொருளை பயன்படுத்தவேண்டும்" என்று விளம்பரங்கள் சொல்லிக் கொடுக்கிறது. இந்தப் பொருட்களை அவள் பயன்படுத்தும்போது, பொருட்சிக்கனத்தோடு, சிந்தனைச் செலவையும் கட்டுப்படுத்தலாம் என்கிற விளம்பரங்கள் சொல்கிறது.

நடுத்தர மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்குப் பதிலாக சீரழிவுத்தன்மையையே நுகர்வுக் கலாச்சாரம் செய்கிறது. வருமானத்திற்கு மீறிய செலவும், தேவையற்ற ஆடம்பரப் பொருட்களை வாங்கி வீட்டை நிரப்பிக் கொள்ளுதலும், கடன் பெற்றாவது தேவையற்ற வசதிகளை பெருக்கிக் கொள்ளலுமே ஒரு ஆண் மற்றும் பெண்ணின் வாழ்க்கைக் கடமைகள் என்றே விளம்பரங்கள் சொல்கிறது. கடன் அட்டைகள், தவணைமுறைகள், தனியார் வங்கிகளின் கடன் உதவி (American Bank, Standard Charted Bank) போன்றவை மேலும், மேலும் மனிதனை பொருளாதார வாழ்வைச் சார்ந்தவையாக, கடனாளியாக மாற்றிக் கொண்டிருக்கிறது. நீங்கள் ரூ.15,000 கட்டினால் போதும் உங்கள் வீட்டு முன்னால் ஒரு கார் வந்து விடும் என்றும், உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் தவணை முறையில் வாங்கிக் கொள்ளலாம் என்றும் விளம்பரங்கள் சொல்கின்றன.

மனிதனுக்கு முதலில் எதுதேவை என்பதை இது பொதுமக்களுக்கு உணர்த்துவது கிடையாது.

அரசே, சிலவற்றைத் தடைசெய்தாலும் கூட அவற்றின் விளம்பரங்கள் தொலைக்காட்சிகளால் விளம்பரப்படுத்தப்பட்டே வருகின்றன. உதாரணத்திற்கு,



படிப்பகம்

www.padippakam.com

பான்பராக் மிகப்பெரிய வாய் உபாதைகளையும், வாய்ப்புற்று நோயை உண்டாக்கக் கூடியது என்று தெரிந்து இவற்றை விற்க தடைசெய்தது. ஆனால் விளம்பரங்களில் 'உயர்ந்தவர்கள் விரும்பும் உயர்வான தேர்வு' என்று ஒரு பான்பராக் விளம்பரம் அறைகூவுகிறது தொலைக்காட்சியில். அதன் காட்சி ரூபத்தைப் பார்க்கும் யாரும் அதை வாங்கத்தான் ஆசைப்படுவார்கள்.

நாம் உண்ணும் உணவு முறையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. துரித உணவு நிலையங்களும், காபி டிஃப்களும் வந்துள்ளன. நம்முடைய நாட்டின் சீதோஷ்ன நிலைக்கு இவை ஏற்றதல்ல. உடைகளும் கூட இப்படி ஒரு மாற்றத்துக்கு உள்ளாகியிருப்பதைப் பார்க்க முடியும். இன்று கல்லூரி செல்லும் இளைஞரின் உடைக்கும். அவனுக்கும் தொடர்பில்லாமல் தொலைந்த தன் அடையாளத்தை தேடிக் கொண்டிருக்கின்றான். 'ஜீன்ஸ்' உடைக்காக ஊடகங்களில் வெளிவரும் விளம்பரங்கள், இந்த உடையை ஆண்மையின் அடையாளமாக விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறது. முகச்சவரம் செய்து கொள்ளும் ஷேவிங் கிரீம்களும், ஆண்களுக்கான வாசனைத்திரவியங்களும் இதைப் பயன்படுத்தும் ஆண்மகனை, பெண்ணே தேடிவருவாள் என்றும் விளம்பரம் உணர்த்துகிறது.

ஆன்மீக உணர்வு என்று எடுத்துக்கொண்டால்கூட நிகழ்த்துக் கலைகளின் வழியே பிற்போக்கு நிலவுடமை ஆன்மீக உணர்வு பரவிய காலம் போய் கிராப்பிக்ஸ்-ன் வழியே ஊடகங்களில் ஆன்மீகம் என்னும் பெயரில் வன்முறைக் காட்சிகளே இடம் பெற்று வருகிறது. சமீபத்தில் தனியார் டி.வி.யில் ஒளிபரப்பான 'அம்மன்' எனும் பக்தி படம் ஏகப்பட்ட வன்முறைக் காட்சிகளைக் கொண்டதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இது ஒரு தவறான வழிகாட்டுதலுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. நிலவிவரும் நிலவுடமை இதன் காரணமாகத்தான் இன்று நரபலிக் குற்றங்களும் நிர்வாண வழிபாட்டு முறைகள் போன்ற மூடநம்பிக்கைகள் நிறைந்து காணப்படுகிறது.

## ஈவ்டீசிங், பாலியல் வன்முறை...

ஊடகங்கள் விளம்பரங்கள் என்ற பெயரிலும், அழுகை தொலைக்காட்சி தொடர்கள், பாசாங்கு நிறைந்த சினிமா, கிளுகிளுப்பு கட்டுரைகள் மூலமாக நூர்வோரை, கலாச்சார ரீதியாக ஏமாற்றி வருகிறது. ஈவ் டீசிங் மற்றும் பாலியல் வன்முறை, நமது சமூகத்தில் பெருகுவதற்கு நுகர்வு கலாச்சாரத்தை சீரழிக்கும் ஊடகங்களையும் காரணமாகச் சொல்லலாம். தற்போது, பெண்களின் உடலே, நுகர்வு பொருளாக மாறி வருகிறது, ரீடா மேரி. டாக்டர் பிரகாஷ் போன்றவர்கள் செயலை கண்டித்தா ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன? பக்கத்துக்கு பக்கம், பாலியல் விசயங்களை முதுன்மைப்படுத்தி, பாலியல் கொடுமை என்பதை மக்கள் உணராமல் பார்த்துக் கொண்டு, தப்பு செய்தவனை விட்டுவிட்டு பாதிக்கப்பட்ட பெண்களின் புகைப்படங்களை வெளியிட்டு, வியாபாரத்துக்காக என்னென்ன செய்கின்றன ஊடகங்கள்?

இவ்வாறு பண்பாட்டின் பலவிதமான கூறுகளில் நுகர்வுத் தன்மை பல சீரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல்

அரசியலிலும் கூட இந்த நுகர்வுத் தன்மை பல சீரழிவுகளை ஏற்படுத்தி வருகிறது. அரசின் தாராளமயமாக்கல் கொள்கைதான் இன்று பல சீரழிவுகளுக்குக் காரணமாக உள்ளது. பன்னாட்டுச் சந்தைகள் மலிவான விலையில் இடம்பிடித்து இன்று ஏகமான லாபத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசின் சார்பான அலை நடத்தி வரும் ஊடகச் சாதனங்கள், கூட இவை குறித்த எவ்வித சிரத்தையுமின்றி அவர்களின் பொருட்களை விளம்பரப்படுத்தி அவற்றின் வழியே லாபத்தை ஈட்டுவதிலேயே பெரும் குறியாக உள்ளது. மக்களைக் குறித்தோ, அவர்களை மேம்படுத்த செய்யும் கல்வி, கலை, இலக்கியம் குறித்தோ எவ்வித அக்கறையும் கிடையாது. இவர்கள் தங்கள் ஊடகச் சாதனங்களை தம் அரசியல் லாபத்திற்காகவே பயன்படுத்தி அவற்றின் வழியே மக்களையும் ஏமாற்றி வருகின்றனர். இன்று பல அரசியல் தலைவர்கள் அனைவரும் பன்னாட்டுச் சந்தைகளின் நிறுவனங்களுடைய கைக்கூலிகளாக மாறி அவர்களின் பினாமிகளாக இருப்பதைக் கூட நாம் காணமுடிகிறது.

இப்படிப்பட்டவர்களுக்கு நடுத்தர மக்களைப் பற்றி எவ்விதக் கவலையும் கிடையாது. இதற்குச் சரியான சான்றாக எடுத்துக் கொண்டோம் என்றால் அரசு நிர்வாகத்தின் கீழ்வரும் கல்வித்துறை. இந்தக் கல்வித்துறை இன்று அரசுகளின் அக்கறையற்ற தன்மையினால் தனியார்களிடம் சென்று ஒரு சீரழிவையே ஏற்படுத்தியுள்ளது.

கல்வி மானியக் கோரிக்கை பட்ஜெட் நகல் 1999–2000–க்கான புள்ளி விவரங்களைக் காணும்போது, கல்வித்துறையில் தனியார் நிறுவனங்களின் ஆக்ரமிப்பைக் காணமுடியும்.

| | அரசு | தனியார் (சுயநிதி) |
|---|---|---|
| 1. உயர்நிலைப்பள்ளி | 2030 | 1431 |
| 2. மேல்நிலைப்பள்ளி | 1235 | 866 |
| 3. கல்லூரி | 63 | 172 |
| 4. பொறியியல் கல்லூரி | 7 | 104 |
| 5. பாலிடெக்னிக் | 21 | 143 |
| 6. மருத்துவம் | 9 | 3 |
| 7. ஐ.டி.ஐ. | 46 | 650 (சுமார்) |

பணமிருந்தால் மட்டுமே படிக்க முடியும் என்றும் கல்வி ஒரு விலைஉயர்ந்த சரக்கு என்றும் இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

அரசோ, அரசு நிர்வாகங்களோ, அரசின் ஊடகச் சாதனங்களோ எவ்விதக் கவலையும் இல்லாமல், மக்களின் உண்மையான பிரச்சனைகள் குறித்து விவாதித்தல் இன்றி, இன்று ஒரு தேவையற்ற விவாதங்களையும், நிகழ்ச்சிகளையும் வழங்குகின்றன. ஊடகச் சாதனங்கள் அனைத்தும் இன்று இந்தியாவில் அரசியல் சார்புடையனவாக மாறிப் போய்விட்டன என்பது கொடுமையின் உச்சம்.



படிப்பகம்

www.padippakam.com

## பொருளாதாரம்

பொருளாதார அடிப்படையில் காணுகின்றபோது இத்தளத்தின் அடிப்படையில்தான் மக்கள் வாழ்கின்ற வாழ்க்கை முறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதென்று கூறலாம்.

பொருளாதார முன்னேற்றம் அடைந்திருக்கக் கூடிய வர்க்கம் எது என்று நோக்கும் போது உயர் குடியினரைச் சேர்ந்தவர்களே மேலும் மேலும் பொருள் முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருப்பதைக் காணலாம். இவர்களின் வாழ்க்கை முறையைப் பார்க்கும் போது இவர்கள் மேல்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதையும் ஏறத்தாழ அதுபோல் வாழ முயற்சிப்பதையும் பார்க்கலாம். தொலைக்காட்சி ஊடகத்தில் வெளிவரும் தொடர்களும் கூட இத்தகைய குடும்பதில் ஏற்படும் சிக்கல்களைக் குறித்துதான் பெரும் கவலைப்படுவதாகத் தெரிகிறது. இவர்களின் பாசாங்கு நிறைந்த உணர்வுகளும், பாலுறவுச் சிக்கல்களுமே இவர்களின் பிரதானப் பிரச்சனையாக விளங்குகிறது. அடித்தட்டு மக்களின் பொருள் சார்ந்த பிரச்சனைகள் குறித்து எவ்விதக் கவலையும் இல்லை.

தாராளமயமாக்கலின் விளைவாக நிறைய தொழில் நிறுவனங்கள் இங்குத் துவங்கப்படும் என்றும் அதன்மூலம் நம் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகும் என்றும் அரசு அறைகூவி அறிவித்தது. ஆனால் நிகழ்ந்தது என்ன என்று நோக்கும் போது இக்கொள்கை மூலமாக கார் உற்பத்தித் தொழிற்சாலைகள் இந்தியாவில் நிறுவப்பட்ட அதே வேளையில் நம் நாட்டுக் கார் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவனங்களும் மூடப்பட்டது. Hyundai Santro, Ford, Matiz போன்ற நிறுவனங்கள் இங்கு தோன்றியபோது ஏற்கனவே இருந்த Standard Motors தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டது. அத்தொழிலாளர்களின் பொருளாதார நிலை குறித்து அரசுக்கு எவ்வித சிரத்தையும் கிடையாது. இக்கார் நிறுவனங்களுக்கு உதிரிப்பாகங்கள் தயாரித்துத்தரும் சிறுசிறு தொழிற்சாலைகளும் கூட இன்று அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மூடப்பட்டுள்ளன.

ஏனெனில் Hyundai போன்ற பெரிய நிறுவனங்கள் உதிரிப்பாகங்களைக் கூடத் தாமே தயாரித்துக் கொள்வதால் மேற்கண்ட நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பொருளாதார நிலையிலும் இந்நுகர்வுத் தன்மை பெரும் கேடான விளைவையே ஏற்படுத்தியிருக்கின்றது.

பன்னாட்டு நிறுவனங்களின் கைக்கூலிகளான இந்திய ஆளும் கும்பல், உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை ஏலம் விட்டு உழைக்கும் மக்களின் வாழ்வை சின்னாபின்னமாக்கியுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் பண்பாடு, பொருளாதாரம் மற்றும் அரசியல் தாக்குதலால், இந்திய மக்கள் தங்களின் வாழ்க்கை அடையாளத்தை இழந்து நிற்கின்றனர்.

இந்த சீர்கெட்ட நிலையிலிருந்து விடிவு காண வேண்டுமெனில் உழைக்கும் மக்களின் தேவையை நிறைவேற்றுதலில் அரசும், அரசு நிர்வாகங்களும் அரசு சார்ந்த ஊடகங்களும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட்டுள்ளது.

– யுகா



படிப்பகம்

www.padippakam.com

# செய்தி துளிகள்



சேலம் மாவட்டம் ஓமலூரில் செம்மண்கூடல் என்ற சிறு கிராமத்தில் 200 தலித் குடும்ப மக்கள், வன்னிய சாதியின் சாதிவெறி தாக்குதலுக்கு ஆளாகி, கொத்தடிமைகளாக 30, 40 ஆண்டுகளாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

24–01–2002 அன்று, ஆறு மாத கர்ப்பிணி கலைச்செல்வி உட்பட பலரை இந்த சாதிவெறிப் பிடித்த முதலாளிகள் அடித்து துன்புறுத்தியுள்ளனர்.

கொத்தடிமையின் கொடுமையால் பரிதவிக்கும் இளம் பிஞ்சு இதோ!

---

ஏறையூர் வேளாண்மை விரிவாக்க கிடங்கு மேலாளராக இருப்பவர் லலிதா. இளம் வயதிலேயே கணவனை இழந்த இவரிடம் சில்மிஷம் பண்ண ஆரம்பித்தார் உளுந்தூர் பேட்டை வேளாண்மை வளர்ச்சி அதிகாரியான ஞானவேல். பாண்டி மாஸ் ஒட்டலுக்கு அழைப்பது குருக்கோவிலூர் போய் வரலாமென வற்புறுத்துவது என்ன எப்ப கவனிக்கப் போறேன்னு டபுள் மீனிங்ல பேசியுள்ளார்.

கடைசியா ஜனவரி 2–ம் தேதி கிடங்கை மூடும் நேரத்துக்கு வந்து, இருப்பை சரி பார்க்கணும்னு சொல்ல, மூட்டைகளை எண்ணிக்காட்டியுள்ளார் லலிதா, பிறகு லலிதாவை ஒரு மூலையில் தள்ளி, எனக்கு பதில் சொல்லு என்று சொல்ல, அவர் பிடியிலிருந்து திமிறி வெளியில் ஓடி வந்துள்ளார்.

எனக்கு இணங்காட்டி, உன்னை பணி நிரந்தரம் செய்ய மாட்டேன்னு சொல்லி ஞானவேல் இருப்பு குறைவா உள்ளதா எழுதி வைத்துவிட்டு போயுள்ளார். இதன்பின் ஞானவேலுவிடமிருந்து தொடர் மிரட்டல் வர, தற்கொலை முயற்சியில் இறங்கிய லலிதாவை அக்கம் பக்கத்தினர் காப்பாற்றியுள்ளார்கள்.

லலிதாவுக்கு நேர்ந்த கொடுமையைக் கண்ட தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க மைய மேலாளர்கள் சங்கம் ஒரு வாரத்திற்குள் ஞானவேல் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் போராட்டங்களை நடத்துவதாக இணை இயக்குநருக்கு கோரிக்கை வைத்துள்ளது.

நக்கீரன் : 5.2.2002



படிப்பகம்

www.padippakam.com

## ஹெல்ப் லைன் திட்டம்

பெண்களின் பல்வேறு பிரச்சனைகளையும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளையும் உடனடியாக விசாரித்து தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடங்கப்பட்டது தான் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். அவை காதல் திருமணம், கட்ட பஞ்சாயத்து என்ற அளவிலேயே திருப்தி அடைந்து விட்டன. எனவே அவற்றுக்கு மீண்டும் ஒரு உத்வேகம் அளிக்க கடந்த செப்டம்பரில் தொடங்கப்பட்டது தான் ஹெல்ப் லைன் திட்டம். ஒரே ஒரு போன் செய்யுங்கள். உங்கள் பிரச்சனைகள் எதுவானாலும் அதைத் தீர்க்க மகளிர் காவல் நிலையத்தின் கரங்கள் ஓடோடி வரும். இப்படி பெரும் நம்பிக்கையை உத்தரவாதமாக்கித்தான் ஹெல்ப் லைன் என்றத் திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால் இத்திட்டத்தின் பிரச்சனைகள் பரிசீலனை செய்யப்படாததால் இது மற்றொரு மகளிர் காவல் நிலையமாகவே செயல்படுகிறது.

**குமுதம் ரிப்போர்ட்டர் (24.1.2002)**

# பெருகி வரும் பாலியல் வன்முறை

**- ஓர் நேர்காணல்**

Cலாத்காரம், ஆபாசப் படம் 'உல்லாச' வாழ்க்கை என்பது அந்நிய நாட்டில் நடந்தாலே 'ஐயோ' என்று வாய்பிளந்து கேட்கும் நாம் இன்று நம் தொலைக்காட்சிகளிலும், செய்திதாள்களிலும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தினமும் இன்று என்ன செய்தி என்று விறுவிறுப்பான திகில் படம் பார்ப்பதைப் போன்று புதைந்துள்ள மர்மங்களை அவை வெளிச்சப்படுத்தி வருகின்றது. இதனால் பலரின் அந்தரங்கமான லீலைகள் அம்பலமாகி வருகின்றன. (டாக்டர் பிரகாஷின் லீலை, ரீட்டாமேரிக்கு நடந்த கொடுமை) நாளேடுகளின் மூலம் இந்த மாதிரி செய்திகளை தெரிந்துக்கொண்டாலும் இப்படியும் நடக்குமா என நமக்கு நாமே தான் பேசிக் கொண்டிருக்கிறோம். இதை எதிர்த்து கண்டன ஊர்வலமோ ஆர்ப்பாட்டமோ இன்றுவரை நடக்கவில்லை.

பெண்களை தெய்வம் என்றும், நாட்டின் கண்கள் என்றும் சித்தரித்த காலம் முடிந்துவிட்டது. தாம்பத்திய உறவின்போது சாத்தியப்படுகின்ற பெண்களின் அந்தரங்கமான பாகத்தை தற்போது படமெடுத்து வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டனர். நாளேட்டினைப் புரட்டினால் இது நம்நாட்டு செய்தியா அல்லது மேலை



படிப்பகம்

www.padippakam.com

நாட்டில் உள்ளதா எனும் அளவிற்கு படிக்கும் ஒவ்வொருவரையும் பதைபதைக்க வைக்கிறது. அவர்களில் சிலரின் உணர்ச்சிக் குமுறல்களைப் பார்க்கலாம்.

**கோகிலா:-**

இந்த மாதிரி தப்பு செய்றவங்க யாராக இருந்தாலும் சரி, அவன் உயர் அதிகாரியாக இருந்தால் என்ன? சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தால் என்ன? இல்லை சாசரி, மனிதனாகவே இருக்கட்டும். தப்பு என்று தெரிந்தவுடனே அதனை நிருபணம் செய்த மறுகணமே அவர்களைத் தூக்கிலிட வேண்டும். கொஞ்ச நாள் என்று விட்டு வைத்திருந்தால் அவனுடைய பண பலத்தை உபயோகித்து கண்டிப்பாக வெளியே வந்து விடுவான். அதனால் தண்டனை உடனடியாக கொடுக்க வேண்டும். இண்டர்நெட்டில் செக்ஸ் வெப்சைட்களுக்கு லைசன்ஸ் கொடுப்பதை நிறுத்த வேண்டும். நம் நாட்டு கலாச்சார வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்றால் இவை கண்டிப்பாக ஒழிக்கப்பட வேண்டும். கடந்த பத்து ஆண்டுக்களுக்குள் மட்டும் பாலியல் வன்முறையின் விகிதம் அதிகரிப்பதற்கு காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள். கண்டிப்பாக சென்சார் செய்யப்படாத ஏ படங்களும், இந்த மாதிரி உல்லாச சைட்டுகளும்தான்.

**வசந்தி:-**

பிலிப்பைன்ஸ் நாட்டில் அரசாங்க அதிகாரியை அடித்துக் கொன்றதைப் போன்று நம் நாட்டிலும் இதுமாதிரி அக்கிரமம் செய்பவர்களை அடித்துக் கொன்றாலும் ஆத்திரம் தீராது. சமுதாய மாற்றம் ஏற்பட வேண்டும். நம் அரசியல் சட்ட திட்டங்களில் மாற்றங்கள் வந்தாலே ஒழிய இவை கூடிக்கொண்டேதான் வரும். இன்டர்நெட்டில் செக்ஸ் வெப்சைட்டுகளை பார்ப்பதால்தான் பிரகாஷ் மாதிரி ஆட்கள் நிமிடத்துக்கு நிமிடம் பலமான சைட்டுகளை உருவாக்கி ஆட்டம் காண்பிக்கிறார்கள். சைனாவில் ஆபாசம் என்று தெரிந்தால் சைட்டுகளை நாட்டிற்குள் நுழைய விடமாட்டார்கள். அதே மாதிரி இந்தியாவிற்குள்ளும் ஒரு கட்டுப்பாடு வரவேண்டும்.

**கீதாதாஸ்:-**

பண்ற தப்பையும் பண்ணிட்டு சிரிச்சிக்கிட்டு போஸ் கொடுக்கறப்போ வயிறு எரியுது. அரசும் இதற்கு ஒரு ஆக்ஷனும் சின்சியரா எடுக்கறதில்லை. அப்படியே எடுத்தாலும் அவர்களுக்க சாதகமாகவே அமைந்து விடுகிறது. சரியான தீர்ப்பினை எண்ணிவிடும் அளவுக்குத்தான் சமுதாயம் அமைந்துள்ளது. தீர்ப்பு என்றால் அது சாதாரணமாக பணம் கட்டி தப்பித்து விடுவதால் முடியாது. அணுஅணுவாக கொடுமைகளை அவர்கள் அனுபவிக்க வேண்டும். எந்த காரணமானாலும் பெயில் கொடுக்கக் கூடாது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனையைப் பார்த்து மற்றவர்களும் பயப்பட வேண்டும். குற்றம் செய்பவர்கள் தாமாகவே தப்பை உணரும் நிலை வரவேண்டும்.

**கல்பனா:-**

கல்யாணம் ஆனவங்க வேற ஒரு பெண்ணை பார்க்கிறதை முதல்ல நிறுத்தணும். இப்பல்லாம் கல்யாணம்ற சடங்குக்கே அர்த்தம் இல்லாமல் போய்விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கல்யாணத்துக்கு பிறகுகூட இஷ்டத்துக்கு பொண்ணுங்க அலைஞ்சுட்டு பின்னால அதை மறைக்க கொலைதான் சரியான வழி என்று சுலபமாக முடிவெடுத்து விடுகின்றனர். இந்த மாதிரி பண்றவங்களை போஸ்டர் அடிச்சு ஒட்டி கேவலப்படுத்த வேண்டும். என்னைப் பொறுத்தவரை விபச்சாரத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்றெல்லாம் நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால் பணம் இல்லை என்பதற்காக அவர்கள் அவ்வாறு பிழைக்கின்றனர். அதற்கு அரசும்தான் உரிமை கொடுத்திருக்கின்றதே.

**ராதிகா:-**

சட்டத்திலே முதல்ல தப்பு செய்றவங்களை உணர வைக்கிற மாதிரி தண்டனை கொடுக்கப்பட வேண்டும். அந்த காலத்துல நடந்த மாதிரி கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி மொட்டை அடிச்சு, ஊர்வலமா கொண்டு வரணும். கரண்ட் ஷாக் கொடுக்கணும். பத்திரிகைகள் அவரைப்பற்றி அக்குவேரா, ஆணிவேரா அலசணும். வேற செய்தி வந்தவுடனே இந்த மாதிரி சமூகக் குற்றங்களை விட்டுவிடக் கூடாது. பெண்கள் இதைப் பார்த்து சும்மா இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். உலக அழிவுக்கு தொடர்பு வரும் அளவுக்கு கொதிக்கத்தான் போகிறார்கள்.

என்னதான் பத்திரிகைகளும், தொலைக்காட்சியும் மாறி மாறி துப்பறியும் வேலையில் இறங்கினாலும் முடிவு என்னவோ சப்பென்றுதான் இருக்கிறது. எந்த விதமான தண்டனையும் இல்லாமல் தான் உண்டு, தன் வேலை உண்டு என்று வழக்கம்போல் வேலையை ஆரம்பித்து விடுகின்றனர். ஆட்டக்காரர்கள், தவறான வழிகளில் பெண்களை உபயோகித்தது மட்டுமல்லாமல் தவறையும் அவர்கள்மீதே போட்டு சமயோஜிதமாக தப்பித்து விடுபவர்கள்தான் நாட்டில் அதிகம். அதுதான் ஆண்களை ஆட்டம்போடும் சாதி, பெண்களை அடிமையாகும் சாதி என்று தனியாக பட்டம் கொடுத்தாச்சே.

**– ராகவி**

---

வரதட்சணை

முடி நரைப்பதற்குள்
முடிக்க நினைத்தாள்
கல்யாணத்தை
பெண்ணின்
முடியே நரைத்தது
வரதட்சணை வழங்க
முடியாததால்

*- ச*ப்ரா பேகம்*

கல் சுமப்பாள் மண்சுமப்பாள்
கட்டளைகளைச் சுமந்துகொண்டு
கைவீசி மேட்டில் செல்வாள்
மெல்லியல் என்பதொரு
பெண் இலக்கணம் இல்லை
வர்க்க பேத சமூகத்தின்
வார்த்தை ஜால வித்தை

*- கனா*

தேர்தல்

சோற்றுக்கு வழியில்லாமல்
செத்த மக்களை உயிர்ப்பித்தோம்
வாக்காளர் பட்டியலில்

*- ஜீவாலமுகி*

---



படிப்பகம்

www.padippakam.com

# பெங்களூரில் நடந்தேறிய ஒரு நாள் மண்டல கருத்தரங்கம்

ஜனவரி 20, 2002 அன்று 'பெண்கள் மீதான வன்முறைக்கெதிரான தற்காலிக கமிட்டியின்', சார்பாக ஒருநாள் மண்டல கருத்தரங்கம் பெங்களூரில் சிறப்பாக நடந்தேறியது. கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலிருந்து ஏறத்தாழ 400 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இம்மாநிலங்களிலிருந்து வந்த 15 பெண்கள் இயக்கங்களின் பங்களிப்புடன் கருத்தரங்கம் சிறப்பாய் நடந்தது.

கர்நாடக மகிளா ஜாகிருதியின் எழுச்சிமிகு பாடலும், ஆந்திர பிரதேச தைதன்ய மகிளா சமக்யாவின் எழுச்சிமிகு கொட்டும் கருத்தரங்க பிரதிநிதிகளை வரவேற்றன. கர்நாடக பெண் எழுத்தாளர் சாரா அபுபக்கர், பெண்கள் மீது ஏவப்படும் ஒடுக்குமுறைகளை விவரமாக விவரித்து கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

'பாலியல் வன்முறை – ஒரு அடக்குமுறை கருவி' என்ற தலைப்பில், தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் துணை செயலாளர், டாக்டர் எம்.ஆர். சஃப்ரா பேகம் உணர்ச்சிமிகு சிறப்புரையாற்றினார். கேரளாவை சார்ந்த வழக்கறிஞர் ஷைனா, இந்த காலை அமர்விற்கு தலைமை தாங்கினார். "அரசும் பெண்கள் மீதான வன்முறையும்" என்ற தலைப்பில், ஆந்திர பிரதேச சிவில் உரிமை இயக்கத்தின் தலைவர் ரத்தினமாலா எழுச்சிமிகு சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகத்தின் மாநில தலைவர், அஜிதா இந்த மாலை அமர்வை தலைமையேற்று நடத்தினார்.

ஆந்திர பிரதேச மகிளா சமக்யாவின், பவனா, "கண்ணோட்டத்தை நோக்கி" என்ற தலைப்பில், தற்காலிக கமிட்டியின் கண்ணோட்டத்தை விளக்கினார்.

கருத்தரங்கத்தின் இடையிடையே கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் சிறப்பான கலைநிகழ்ச்சிகள் பிரதிநிதிகளை உற்சாகமூட்டியது.

கருத்தரங்கின் இறுதியில்,

1. குடும்ப வன்முறை குறித்து இயற்றப்படவிருக்கும் சட்டத்தை கண்டித்தும், பாலியல் வன்முறை சட்டத்தில் பெயரளவிலான சீர்த்திருத்தங்களை கண்டித்தும்,
2. பா.ஜ.க.வின் 'பொடோ' சட்டத்தை கண்டித்தும்,
3. வீரப்பனை தேடும் பெயரில் பல பெண்களை பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்திய சிறப்பு அதிரடிப்படையின் அராஜகங்களை கண்டித்தும்,
4. தமிழகத்தில் சிறையதிகாரிகளின் கொடூர பாலியல் வன்முறைக்கு இரையாக்கப்பட்ட ரீட்டா மேரிக்கு நீதி கோரியும்,
5. பல பெண்களை சின்னாபின்னமாக்கிய டாக்டர். பிரகாசை தண்டிக்க கோரியும்,
6. கர்நாடகத்தில் நிலவுடமை தாக்குதலால் பெண் நிர்வாணப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டதை கண்டித்தும்,
7. ஆந்திரத்தில் கல்லூரி மாணவி கொல்லப்பட்டதை கண்டித்தும், தீர்மானங்கள் இயற்றப்பட்டன. எழுச்சிமிகு முழக்கங்களுடன் கருத்தரங்கம் நிறைவேறியது.

– ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# கனம் மாவட்ட உரிமையியல் நீதிபதிக்கு
# வணக்கமாய் தெரிவிக்கும் மனு :

என்னுடைய பெயர் ஆனந்தி. வயது 35. சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர். நான் கடந்த 28–01–2001ல் தருமபுரி மாவட்டத்தில் இருக்கும் மல்லிக் கோட்டையில் "ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் சட்டத்தின்" கீழ் கைது செய்யப்பட்டேன். பின்பு நான் பெண்கள் தனி சிறை, வேலூரில் சிறைக் கைதியாக 30–01–2001–ல் அடைக்கப்பட்டேன்.

நான் இந்த மனுவை தங்கள் முன் சமர்ப்பிதற்கான காரணம் நான் தனிமைச்சிறையில் அடைக்கப்பட்டதில் இருந்தும், மயக்க ஊசி போடப்பட்டதால் என் மனநிலை பாதிக்கப்பட்டதில் இருந்தும், நலம் பெறுவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்பதாகும். மற்றும் எனக்கு சிறைக் கொடுமையால் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தும் சரியான சிகிச்சை அளிக்காததால் வெளியில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு அனுமதி அளிக்க வேண்டியும் இந்த மனுவை விண்ணப்பிக்கிறேன்.

நான் சிறைக் கைதியாக நீதிமன்றக் காவலில் பெண்கள் தனிச்சிறைக்கு, வேலூர் அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கிருந்த பெண் தலைமை வார்டன் குருவம்மா அடித்து, நிர்வாணப்படுத்தி என்னை சிறையில் அடைத்தார். அடித்ததால் ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவ உதவி கோரியபோது மறுக்கப்பட்டது.

சிறையில் எனக்கு சரியான உணவு வழங்கப்படவில்லை என்ற காரணத்தையொட்டி மார்ச் 8, 2001ல் சிறையில் உண்ணாவிரதம் தொடங்கினேன். 2–வது நாள் உண்ணாவிரதத்தின்போது ஜெயில் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் தண்டனைக் கைதிகளை வைத்து என்னை மிரட்டி உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கூறினர். மறுத்த காரணத்தினால் என்னை செருப்பால் அடித்தனர். அவர்கள் துன்புறுத்திய காரணத்தினால் நான் உண்ணாவிரதத்தை கைவிட நேர்ந்தது.

மே, 2001ல் சந்திரா என்ற விசாரணைக் கைதி நோயாளி சிறையில் அனுமதிக்கப்பட்ட போது நான், ஏன் காரணமின்றி அவரை நோயாளி சிறையில் அடைக்கிறீர்கள் என்று கேட்டேன். உடனே 10 கைதிகளை அதிகாரிகள் அனுப்பி என்னை செமையாக உதைத்தனர். என்னையும், சந்திராவையும் செருப்பால் அடித்தனர். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் அஞ்சலை மற்றும் நூர் என்பவர்கள். பின்பு நான் தரதரவென்று இழுத்துச் செல்லப்பட்டேன். செப்டம்பர் 21–ம் தேதி நான் விசாரணைக்காக கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது என்னுடன் வந்த காவலர்கள் என்னை கேலியும், கிண்டலும் செய்தனர். குறிப்பாக காரிமங்கலம் காவல் நிலையத்தை சேர்ந்த அப்துல் ஜாபர் மற்றும் அவருடன் வந்த காவலர்கள்.

மேற்படி கேலியும், கிண்டலும் செய்ததை எதிர்த்து நான் சிறையில் மீண்டும் உண்ணாவிரதம் இருந்தேன். அப்போது சிறையில் பணிபுரியும் வாசு, வேலூர் என்பவர் என்னை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு மிரட்டினார். நான் இந்த விசயங்களை நீதிமன்றத்தில் கூறுவேன் என்று சொன்னபோது உன்னை கொன்றுவிடுவேன் என்று கூறினார்.

மேலும் நவம்பர் மாதம் மீண்டும் விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றபோது தருமபுரி க்யூ பிரிவை சேர்ந்தவர்கள் "சிறையில் நீ உண்ணாவிரதம்



படிப்பகம்

www.padippakam.com

போன்ற பிரச்சனைகளை செய்து வந்தால் உனக்கு கிடைக்கக் கூடிய ஜாமீனை கிடைக்காமல் செய்து விடுவோம்" என்று மிரட்டினார்.

பின்பு நவம்பர் 18–ம் தேதி எனக்கு தனிமைச் சிறையில் இருக்கின்ற அந்த நிலை கடுமையாக்கப்பட்டது. அன்று சிறை மருத்துவர் அல்லி கிருபாஸ் எனக்கு ஊசி போட்டார். அதனால் என் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டது. என்னால் சரிவர எதையும் உணர முடியாத சூழ்நிலையில் தொடர்ந்து இருந்து வருகிறது. என்னால் சரிவர பேச முடியவில்லை. தூங்க முடியவில்லை. எனக்கு அரைகுறை நிதானம் 27–ம் தேதியில் இருந்துதான் ஏற்பட்டது. மருத்துவ உதவி கேட்டு பின்பு நான் விண்ணப்பித்து எந்தவித பலனும் இல்லை. அந்த நாட்களில் நான் என் உடைகளிலேயே மலம், சிறுநீர் ஆகியவற்றை கழித்திருக்கிறேன் என்பதையே சிறை வார்டர்கள் கூறிதான் எனக்கு பின்பு தெரிந்தது.

எனவே தாங்கள் கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இந்த மனுவின்மூலம் தயை கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன். தனிமைச் சிறையில் இருந்து என்னை விடுவித்து சிறை விதிப்படி சக கைதிகளோடு பழகும் வாய்ப்பை ஏற்படுத்தி தருமாறு வேண்டுகிறேன். என்னுடைய மனநிலை தடுமாற்றத்திற்கான மயக்க ஊசியின் நிலை குறித்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

எனக்கு தொந்தரவு செய்த மேலே குறிப்பிட்ட மற்ற கைதிகள் மற்றும் சிறை அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். சிறையில் இருந்து நீதிமன்ற விசாரணைக்கு செல்லும்போது என்னை கேவலமாக அவமானப்படுத்திய பாதுகாபலர்கள் மீதும் மற்றும் என்னை மிரட்டிய க்யூ பிரிவு காவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

– ஆனந்தி

36–ம் பக்க தொடர்ச்சி

அவர்களைப்போல் தாத்தாவிடம் தன்னால் பேச முடியாது என்று சமாதானம் கூறிவிடுகிறான். ஜீகுவின் மாணவர் இயக்க ஈடுபாடு தாத்தாவிற்கு தெரிய வருகிறது. அதேபோல ஜீமின் காதலும் தெரிய வருகிறது. தாத்தாவிடமிருந்து இதற்குக் கடுமையான எதிர்ப்பு கிளம்புகிறது. இதை மீறி அவர்கள் செயல்படுகிறார்கள். ஜீகுவின் உதவியால் ஜீமின் காதல் திருமணம் நிறைவேறுகிறது. குடும்பத்தில் பேரன் எடுத்துவிட்ட தன் மகன் வெளியில் வேசியிடம் உறவு வைத்துக் கொண்டு பொருளை விரயம் செய்வது மற்றும் குடும்பக்கட்டு உடைந்து தீங்கான காரியங்கள் குடும்பத்தில் தலைதூக்க ஆரம்பித்திருப்பதையும் உணருகிறார். வாழ்வின் விளிம்பில் இருக்கும் அவரால் இதனைத் தடுக்க முடியவில்லை. ஆனால் தன் பேரன்களான ஜீகு, ஜீமின் ஆகியவர்களின் செயல்கள், நடவடிக்கைகள் மீது நல்ல அபிப்ராயம் ஏற்பட்டு சாகும் தருவாயில் அவர்களை நேரில் வரச்சொல்லி நல்லாசி கூறுவதுபோல் அடையாளப்படுத்திவிட்டு மரணமடைகிறார்.

அவரின் சாவிற்கு பிறகு குடும்ப ஆதிக்கம் குடும்பத்தின் மூத்தவர்கள் கைகளுக்கு மாறுகிறது. மிகவும் சீரழிந்து போன கட்டுபாடுகள் மேலும் வலுவாக ஆதிக்கம் செய்ய ஆரம்பிக்கின்றன. இதனை வெறுத்தவனாக ஜீகு புரட்சி இயக்கத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டி வீட்டைவிட்டு பீஜிங் நகர் நோக்கிப் பயணத்தை மேற்கொள்கிறான். "அவனைப் புதிய சிந்தனை ஆட்கொண்டது. அது மகிழ்ச்சியா... வருத்தமா... புரியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம். அவன் குடும்பத்தை விட்டு வெளியேறிவிட்டான். எல்லையற்ற நீர்பரப்பு கண்ணெதிரே நீண்டுகொண்டே போகிறது. அது அறிமுகமற்ற நகரத்திற்கு அழைத்துச் செல்கிறது. அங்கு வாழ வேண்டிய புது வாழ்க்கையை நோக்கி செல்கிறான். இந்நாவல் சமூக மாற்றத்திற்காக போராடும் அனைவரும் படிக்க வேண்டிய நாவலே!

– நிர்மலா



படிப்பகம்

www.padippakam.com

# தெலங்கானா இயக்கத்தில் பெண்கள்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

## போலீஸ் அடக்குமுறையையும் தேடுதல்-வேட்டையையும் எதிர்த்து

ரஜாக்கர்–நிஜாம் ஆட்சிக் காலத்திலேயே, பாலேமுலா, பாத்தசூர்யாபேட்டை, மல்லாரெட்டிகூடெம், தேவருப்பலா போன்ற அநேக ஊர்களில் ஆயுதப் போலீசார் கிராம மக்களைத் தாக்கிய போது, பெண்கள் ஆண்களின் பக்கம் நின்று கணவனுக்கு கல்லெடுத்துக் கொடுத்தார்கள். ஆண்களைப் போலவே பெண்களும் மிருகத்தனமான தடியடிகளையும் துப்பாக்கிச் சூடுகளையும் சந்தித்தார்கள். மல்லாரெட்டிகூடெத்தில் நடைபெற்ற சண்டையில் தமது கணவரின் பக்கம் நின்று கல்லெடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்த பெண் ஒருத்தி சுட்டுக் கொல்லப்பட்டார். (ஈராண்டுக்கு முன்னால் கிருஷ்ணா மாவட்டத்தில் லங்கா நிலங்களைப் பாதுகாப்பதற்காக சல்லபள்ளி ஜமீந்தாரை எதிர்த்து நடைபெற்ற காஜுல்லங்கா உழவர் போராட்டத்தை வழி நடத்திக் கொண்டிருக்கையில் மிருகத்தனமான முறையில் துப்பாக்கிச் சனியனால் குத்தியும் சுட்டும் கொல்லப்பட்ட வையம்மாவின் பெயர் இங்கு நினைவுகூரத்தக்கது.) ஆண்கள் லாரிகளில் எங்கோ கொண்டு செல்லப்படுவதை பெண்கள் எதிர்த்தார்கள்; “நாங்களும் அவர்களோடு வருகிறோம்; எல்லா விளைவுகளையும் சந்திக்கிறோம்” என்றார்கள். போராடிக் கொண்டிருந்த பெண்களை ஆண்களோடு கூட லாரியில் ஏற்றிக் கொண்ட பிறகுதான் போலிசால் நகர முடிந்தது.

இந்திய இராணுவ, காங்கிரஸ் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் உசூர்நகர் மாவட்டம் விஜயநகரம் மையத்திலும் மிர்யாலகூடெம் வட்டத்திலும் போலிசார் ஏராளமான ஆண்களைப் பிடித்துச் சென்றனர். பெண்கள் அந்த லாரிகளை சுற்றி வளைத்து, நகர விடாமல் தடுத்து, ஆண்களை விடுவிக்கக் கோரினார்கள். திரும்பத் திரும்பத் தடியடி நடத்தியும் பெண்கள் அசைந்து கொடுக்கவில்லை. ஆகவே முடிவில் போலிசார் ஆண்களை விடுவித்து விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று.

கோதாவரி வனப் பகுதியில் குண்டாலாவில் போலீசார் கோயா கிராமம் ஒன்றில் புகுந்து வேட்டையாடி, ஆண்கள் பலரையும் பிடித்தனர். பிடிபட்டவர்களைக் கொண்டசெல்ல முற்பட்டபோது, அண்டைப்புறத்திலிருக்கும் பத்து கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் விரைந்தோடி வந்து, போலீசாரை வளைத்துக் கொண்டு, போகவிடாமல் தடுத்தார்கள். போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பெண்கள்



படிப்பகம்

www.padippakam.com

மரங்களுக்குப் பின்னால் மறைந்து நின்று கற்களால் திருப்பித் தாக்கினார்கள். கைது செய்த ஆண்களை விடுவிக்கும் வரை கலைந்து செல்ல மறுத்தார்கள் முடிவில் போலீசார் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

1950 செப்டம்பரில் குண்டாலா பகுதியில் கட்டுகூடெம் என்ற கோயா கிராமத்தில் ஆண் பெண் எல்லாரும் இராணுவ அட்டூழியங்களை எதிர்த்துப் போராடினர். இராணுவத்தோடு சமர் புரிந்து ஒரு சுபேதாரையும் அவனது ஆட்களில் மூவரையும் கொன்று, அவனது துப்பாக்கிகளையும் கைபற்றினர். இதற்குப் பிறகு இராணுவம் பெரிய படை திரட்டிக் கொண்டு வந்த போது ஊரே அடர்ந்த காட்டுப் பகுதியில் தஞ்சம் புக வேண்டியதாயிற்று. பெண்கள் கடுமையான இந்த சோதனைக் காலத்தை வீரத்தோடு சமாளித்தார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளைக் கூட சத்தமிட்டு அழ விடவில்லை. அவர்களின் இந்த வீரஞ்செறிந்த வாழ்க்கை என்றென்றும் போற்றற்குரியதாய் நினைவில் நிலைக்கும். பெண்கள் எந்த அளவுக்கு உறுதியாகவும் அழுத்தமாகவும் இருக்க வல்லவர்கள் என்பதற்குச் சான்றாய்த் திகழும்.

ராஜாரம் மையத்தில், கெரில்லாக்களுக்கு உதவுகிறவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் லம்பாடி தண்டாவைச் சேர்ந்த ஓர் ஆணையும் பெண்ணையும் போலீசார் முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

அவர்களை உணவும் நீருமின்றி நாட்கணக்கில் இரவும் பகலும் நிற்க வைத்தனர். அவர்கள் மயங்கிக் கீழே விழும் போது மட்டும் சிறிது நீர் கொடுத்து, சுய நினைவு வந்தவுடன் மீண்டும் நிற்க வைத்தனர். கால் வீங்கிப் போயிற்று. ஆனால் இந்த சித்திரவதைக்குப் பிறகும் அவர்கள் இருவரும் கெரில்லாக்கள் பற்றி எவ்விதத் தகவலும் தரவில்லை; அப்படிச் செய்வதைக் காட்டிலும் உயிர் விடுவதே மேலெனக் கருதினர். இனியும் அவர்களைக் கொடுமைப்படுத்துவதில் பயனில்லை எனக் கண்ட எதிரிகள் அவர்களை விடுவித்து விட்டனர்.

சிதிராலா (சிந்தபாலெம்) கிராமப் பஞ்சாயத்துக் குழு உறுப்பினர்களின் மனைவியரை செலக்குர்த்தி முகாமுக்குக் கொண்டு சென்று துன்புறுத்தினார்கள். போலீசார் திரும்பத் திரும்ப பல முறை தேடுதல்–வேட்டை நடத்தியும் அவர்களது கணவன்மார் கிடைக்காததே காரணம். அவர்களது உடைமைகளையும் கால்நடைகளையும் சூறையாடினார்கள். உங்களது கணவன்மார் சரணடையவில்லையானால் உங்கள் கதி இன்னும் மோசமாகும், உங்களைச் சிறையிலேயே நிரந்தரமாய் வைத்து விடுவோம் என்ற எச்சரிச்சையோடு சிறிது காலம் கழித்து அவர்களை விடுவித்தார்கள். வெளியே வந்த பின் இப்பெண்களும் இயக்கப் பணியில் கணவன்மாருடன் சேர்ந்து, போலீசின் கைக்கெட்டாது போனார்கள்.

இந்தக் கிராமத்திலேயே 150 போலீசாரைக் கொண்ட முகாம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் தலைவர்களை அவர்களால் பிடிக்க முடியவில்லை. கிராமக் குழு உறுப்பினர் ஒருவரின் மகனாகிய சிறுவனைக் கைது செய்து மிரட்டினார்கள், அடித்தார்கள். அவன் 14 வயதுச் சிறுவனாக இருந்த போதிலும் எதிரியிடம் பணியாமல், கட்சியின் மாண்பைத் தாழாது காத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

கெரில்லாக்களையும் குழுக்களையும் பேணிக் காப்பதற்கு பெண்கள் அசாதாரண முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டது போராட்டப் பகுதி முழுவதிலும் காணப்பட்ட பொது அம்சமாகும். பெண்கள் கெரில்லாக்களைத் தங்கள் வீடுகளில் தங்க வைத்துப் பாதுகாப்பார்கள். கெரில்லாக்களோ தலைவர்களோ உறங்கிக் கொண்டோ ஓய்வெடுத்துக் கொண்டோ இருக்கும்போது இரவு பகல் பாராது உஷாராய்க் காவல் புரிவார்கள். இரவு பகல் எந்நேரத்திலும் ஆழ்ந்த அக்கறையோடும் அன்போடும் கெரில்லாக்களுக்கும் கட்சி அமைப்பாளர்களுக்கும் உணவளிப்பார்கள். காடுகளிலும், குன்றுகளிலும் இருந்த மறைவிடங்களுக்கு உணவும் இதர பொருட்களும் கொண்டு செல்வார்கள். மாட்டிக் கொண்டால் பயங்கர சித்திரவதைகளையும் அவமானங்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். இந்த மகத்தான போராட்டத்தில் அவர்கள் இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டார்கள்.

1948–51 ஆண்டுகளின் அந்தப் பயங்கர நாட்களில் எத்தனையோ வீடுகளில், எத்தனையோ கிராமங்களில் என்னைப் பாசத்தோடும் அக்கறையோடும் பேணிக் காத்ததை பணிவோடும் நன்றிப் பெருக்கோடும் நினைவுகூர்கின்றேன். போலீசாரோ எதிரியின் கையாட்களோ நெருங்கி வரும் ஆபத்தின் அறிகுறி தென்படுகிறதா என்று பெண்கள் உஷாராய்க் கண்காணிப்பதை அநேக சந்தர்ப்பங்களில் கண்டேன். ஒரு முறை நீண்ட நடைப் பயணத்திற்குப் பின்னர் இரவில் ஓய்வெடுத்துக் கொள்வதற்காகவும் தங்குவதற்காகவும் வீருள்ளபாடுவின் புறத்தே இருந்த தோழர் பாட்டிபண்ட்ல ஜானகிராமையாவின் வீட்டை அடைந்தேன். அவர் வீட்டில் இல்லை; அவரது மனைவி அனுமாயம்மா இருந்தார். நான் மிகவும் களைப்புற்றிருந்ததால் தூங்கிப் போனேன். விடியுமுன் விழித்துப் பார்த்த நான் அப்பெண்மணி நிறைமாதக் கர்ப்பிணியாய் இருந்தும் காவல் புரிந்து கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றேன். பெண்களிடமிருந்து கிடைத்த இத்தகைய அன்பான கவனிப்பும் அயராத பாதுகாப்பும் அந்த நேரத்தில் தலைமறைவு ஊழியர்கள் பலருக்கும் பொது அனுபவமாய் விளங்கியது. மக்கள் நலனின் பால் அவர்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்பு உணர்வு, அந்த உன்னதமான நோக்கத்திற்காகப் போராடுவோர் என்ற முறையில் நம்மிடம் அவர்களுக்கு ஏற்பட்ட மதிப்பு ஆகியவற்றின் வெளிப்பாடே இது.

*(அடுத்த இதழில் தொடரும்)*

Printed by S. Theesmas, Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane, Royapettai, Chennai - 14. Tel : 8410357

Published and owned by P. Ajitha, 658(17/34) Rani Anna Nagar, K.K. Nagar, Chennai - 78.

Printed at Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane, Royapettai, Chennai - 14. Tel : 8410357

Published from 658(17/34) Rani Anna Nagar, K.K. Nagar, Chennai - 78.

Editor : P. Ajitha



படிப்பகம்

www.padippakam.com

Penn Urimai, 'Registered' TNTAM/2001/4002




# குடும்பம்

## சீன நாவல் அறிமுகம்

எழுதியவர் : பாஜின்
தமிழாக்கம் : நாமக்கல் சுப்பிரமணியம்
விலை : ரூ. 85.00
வெளியீடு : அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன்
கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை—24.
கிடைக்குமிடம் : அலைகள் வெளியீட்டகம்,
கீழைகாற்று

'குடும்பம்' என்ற சீன நாவலை படிக்கத் தொடங்கினேன். கீழே வைக்க மனமில்லை. நிலப் பிரபுத்துவ அமைப்பில் குடும்பங்களின் அவல நிலை உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது இந்நாவல். நிலப்பிரபுத்துவ குடும்ப அமைப்புக்குள் முரண்பாடுகளும் எந்திரத் தனமான வாழ்க்கை முறைகளும் உள்ளன என்பதை எடுத்து காட்டுகின்றன.

சீனாவும், இந்தியாவும் விவசாய நாடுகள் மட்டுமின்றி, நிலபிரபுத்துவ அமைப்பின் அம்சங்களான சடங்கு, சம்பிரதாயங்கள், மூட நம்பிக்கைகள் ஆகியவை இரு நாடுகளுக்கும் பொருந்தும். குடும்பத்தின் மூத்தவரே குடும்ப தலைவராக இருந்து இடும் கட்டளைகளை மற்றவர்கள் வாய் திறக்காமல் ஏற்று கொள்ள வேண்டுமெனும் முறையை நம்மைப் போலவே பின்பற்றக் கூடியவர்கள். இக்கூட்டுக்குள்ளிருந்து புதிய தலைமுறை முரண்பட்டு தன் உரிமை முழக்கம் இட்டு அதை நடைமுறைப்படுத்தவும் முனைவதை இந்நாவல் மூலம் காட்டுகிறது.

காவோ என்பவரின் குடும்பத்தை சுட்டிக்காட்டுகிறது இந்நாவல். காவோ என்கிறவர் குடும்பத்தின் தலைவர், அவருக்கு மூன்று மகன்கள், பேரன்கள் என்கிற கூட்டுக் குடும்பம். மூத்த மகன் இறந்து விடுகிறார். அவருக்கு மூன்று மகன்கள். ஜூக்சின், ஜூமின், ஜூகு ஆகியவர்கள். காவோவின் ஆளுமையில் வளர்கிறார்கள். சகல நடவடிக்கைகளையும் தீர்மானிப்பவர். பெரிய பேரன் ஜூக்சின் 'மீ' என்கிற அத்தை மகளைக் காதலிக்கிறான். தாத்தா அவன் விருப்பத்துக்கு மாறாக ருஜீ என்கிற பெண்ணை மனம் முடித்து வைக்கிறார். அவனுக்கொரு வேலையும் ஒதுக்கப்படுகிறது. குடும்பப் பாரத்தை தந்தையில்லாததால் அவனே மேற்கொள்ள வேண்டி வருகிறது.

தம்பிகள் இருவரும் படித்து வருகிறார்கள். அப்பள்ளியில் மாணவர் இயக்கம் வளர்ந்து வருகிறது. 'புதிய அலைகள்' எனும் பத்திரிகையும் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அன்றைய ஆட்சியாளர்களைக் கடுமையாகச் சாடும் கருத்துக்களைத் தாங்கி வருகிறது. அதில் ஜூகு தன்னை இணைத்துக் கொள்கிறான். கட்டுரை எழுதுகிறான். ஜூகுவும், ஜூமினும் முற்போக்குப் புரட்சிகர சிந்தனையோடு வளர்ந்து வருகிறார்கள். இவர்களின் அண்ணன் தாத்தா காவோவின் காலாவதியாகிப்போன பிற்போக்குச் சிந்தனைக்கு கட்டுப்பட்டவனாகவே இருக்கிறான். தனது தம்பிகளின் தர்க்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாதவனாக அவர்கள் கருத்துகளை ஏற்கிற பொழுது

தொடர்ச்சி 32—ம் பக்கம்

படிப்பகம்